# மண்

இதழ் 180

ஜேர்மனி / 2016
கார்த்திகை - மார்கழி / November - December



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரூத் மி\ன் - ஜெயபுரம் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவி நிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

இலங்கையில் பல அனர்த்தங்களும் அரசியல் நடவடிக்கைகளும் அண்மைக்காலங்களில் நடைபெற்றுள்ளன. பாராளுமன்றத்தைப் பொறுத்தளவில் மத்தியில் இரு கட்சிகள் ஒரு அரசாங்கத்தை நடத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை இலங்கை சம்பந்தமாக உடன்பாட்டுத் தீர்மானம் ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது. அமெரிக்க உயரதிகாரிகள் சமந்தா பவர் மற்றும் மலினொவ்ஸ்கி போன்ற பலர் வடக்கு நோக்கிச்சென்று அளவளாவிச் சென்றுள்ளனர். ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் வடக்கு நோக்கிச் சென்று வந்துள்ளார்.

தமிழ் அரசியல் வாதிகள் அரசியல் யாப்பு சம்பந்தமாக முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். தமிழ் மக்கள் பேரவை என்ற பொது மக்கள் குழுவினர் தமிழ் பேசும் மக்களின் கரிசனைகளையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படையாகக் கொண்டுவரும் விதத்தில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதில் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய கட்சிகள் பலவற்றின் தலைவர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அந்த விதத்தில் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட கருத்துகள் தற்போது வெளிவருவனவாக இருக்கின்றன. உலகத் தமிழ் பேசும் மக்கள், கட்சி பேதங்களைத் தாண்டி தனித்த பகைமைகளைத் தாண்டி ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய கட்டம் தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்றது.

2004 சுனாமியின் போது விடுதலைப் புலிகளும் இலங்கை இராணுவமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிவதில் பகைமை மறந்து ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. ஒரு சில நாட்களில் "பழைய குருடி கதவைத் திறடி" என்ற நிலைக்கு வந்துவிட்டனர். உலகளாவிய தமிழ் மக்களை பொறுத்தவரையில் நாடுகளால், கட்சிகளால், கருத்துகளால் நாம் வேறுபட்டிருந்தாலும் தமிழ் மொழி, தமிழர் பாரம்பரியங்கள் என்பன எம்மை ஒன்று சேர்க்கும் தன்மையனவாய் அமைய வேண்டும். அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்று அன்று புலவர் கனியன் பூங்குன்றனார் கூறியது இன்றும் எமது பெறுமதிமிக்க தாரக மந்திரமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது. யாவரும் என் உறவுகள். அதாவது யாவருங் கேளிர் என்று கூற எந்தளவுக்கு எம் மனதில் மனித நேயம் குடி கொண்டிருக்க வேண்டும் என்று பாருங்கள். யாதும் ஊரே எனும் போது நில மடந்தையைக் கூறு போடாமல் அவளின் முழுமையான அழகுடன் அவளைப் பார்க்கும் பாங்கு தமிழ் மகனிடம் இருந்தது என்பதை நாங்கள் உணர வேண்டும். ஆகவே நாங்கள் எங்கிருந்தாலும் எப்பேர்ப்பட்ட நிலையில் இருந்தாலும் எவ்வகையான கட்சி பேதங்கள், கருத்து முரண்பாடுகள், வர்க்க பேதங்கள் கொண்டிருந்தாலும் நாம் யாவரும் ஒரு தாய் மக்களே என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

எமது அரசர்கள் ஆண்ட காலத்தின் பின்னர் தமிழ் மக்கள் மற்றவர்களின் ஆட்சியின் கீழேயே வாழ்ந்து வந்துள்ளார்கள். போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் அதன் பின் சிங்களவர் என்று வாழ்ந்ததால் எதிர்ப்பு வாழ்க்கை எமக்கு பழக்கப்பட்டுவிட்டது எமது ஆயுததாரிகள் அதிகார பலம் கொண்டிருந்த காலத்திலும் மக்கள் வாய்திறக்க முடியாதவர்களாகவே வாழ்ந்தார்கள். இயக்கங்கள் கூறியதே சட்டமாக இருந்தது. ஆகவே வன்முறையற்ற வாக்குவாதம் பேசாத ஒரு சூழலை நாங்கள் உருவாக்க வேண்டியுள்ளது. அன்பும் புரிந்துணர்வும் தான் அதனை வரவழைக்கக் கூடியது. எதிர்ப்பு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து எம் தமிழ் மக்களிடையே இருக்கும் முரண்பாடுகளை முதலில் களைய முன்வருவோமாக!


எமது மக்கள் யாவரும் இந்த உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் மனதால் இணைய வேண்டும் என்பதே எமது வேணவா. தனியொரு தமிழனுக்கு ஏதேனும் ஊறு விளைவிக்கப்பட்டால் ஜகம் யாவிலும் உள்ள தமிழர்கள் குரல் கொடுக்கும் காலம் விரைவில் வரவேண்டும். ஆகவே நம்மிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளை களைந்து விட்டுக்கொடுப்பனவுகள் செய்து ஒருமித்து அரசியல் சமூக விடுதலை நோக்கிப் பயணிப்போமாக!...

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## சோம்பித் திரியேல்...

சிறுவர்களாகிய உங்களுடைய கடமைகள் என்ன?..கல்வி கற்பது, பெற்றோர் கூறும் சிறிய பணிகளைச் செய்வது இவைதான் இல்லையா?.."பரீட்சைக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கிறது இப்போது என்ன படிப்பு" பரீட்சைச் சமயத்தில் படித்தால்தான் நினைவில் நிற்கும் எனக்கூறிப் படிப்பை ஒத்திப்போடலாமா?.. அதேபோலத்தான் பெற்றோர் கூறும் காரியங்களை" இப்போது என்ன அவசரம்" என்று கடமையைச் செய்யச் சோம்பல்ப்பட்டு ஒத்திப் போடக்கூடாது. பிறகு...பிறகு என்று கடமைகளைச் செய்யாமல் வெட்டிப் பொழுதாகக் கழிக்கலாமா?.. இப்படிச் சோம்பித் திரிபவர்களை உற்றாரும் ஊராரும் சோம்பேறி என்று இகழுவார்கள். அதனால்தான் இத்தகைய இகழ்ச்சிக்கு ஆளாகாமல் சோம்பேறியாகத் திரியாதே என்கிறார் ஔவைப்பாட்டி...

## தக்கோன் எனத்திரி...

ஒருவனுடைய பெயரும் புகழும் எப்படிக் கிடைக்கிடைகிறது?...வார்த்தை தவறாமை, அதிக ஆசை இல்லாமை, நாணயம், நம்பிக்கை ஆகிய குணங்களை உடையோராக இருந்தால் அவர்களை மக்கள் உயர்ந்தவன் (தக்கோன்) தகுதியுடையவன் என்று பாராட்டுவார்கள். இவர்களைப் பெரியோர் என்றும் பாராட்டுவார்கள். பேராசை இல்லாமல், பிறரை வஞ்சிக்காமல், மற்றவர்கள் நம்பிக்கை வைக்கும்படி நாணயமாக வாழ்பவர்களை மக்கள் மதிப்பார்கள். போற்றுவார்கள். இதனால் அவர்களுக்குச் சமூகத்தில் கௌரவம் ஏற்படும். இப்படி மதிப்பும் மரியாதையும் பெற்று யோக்கியனாக வாழ நீ முயற்சிக்க வேண்டும். பெரியவர்கள் உன்னை "இவன் தகுதியானவன், உயர்ந்தவன் என்று புகழ்ந்து பாராட்டும்படி வாழ என்கிறார் ஔவைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

21-கேட்டில் உறுதி கூட்டும் உடைமை..

கேட்டில் (கைப்பொருள்) இழந்து துன்பம் வந்த காலத்து உறுதி - மனோ தைரியத்துடன் இருப்பதே உடைமை கூடும். செல்வம் சேர்க்கும். வறுமை வந்தாலும் மனம் தளராது இருப்பது செல்வத்தை உண்டுபண்ணும்.

22-கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி..

கைப்பொருள் தன்னில் - கையில் வைத்திருக்கிற நிலைத்திராத பொருளைவிட, மெய்ப்பொருள் - உண்மையாக நிலைக்கும் பொருள் கல்வியேயாகும். அழிவில்லாத நிலையான பொருள் கல்வியாகும்.

23-கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி..

கொற்றவன் - அரசாட்சியில் அமர்ந்திருப்பவன் அறியவேண்டியது என்னவென்றால் உற்ற இடத்து மக்களுக்குத் துன்பம் நேர்ந்தால் அவர்களுக்கு உதவி செய். அரசாட்சியில் அமர்ந்திருப்பவன் மக்கள் துன்பம் உள்ள இடத்திற்குச் சென்று உதவுதல் கடமையாகும்.

24-கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு..

கோள் செவி - கோள் கேட்கும் இயல்புள்ள ஒருவனது காதிலே குறளை - கோள் வார்த்தைகளை ஏற்றினால் காற்றுடன் நெருப்புக் கலந்தது போல மூளும். கோள் சொல்வதைக் கேட்பவன் காதிலே ஒருவன் கோள் மூட்டினால் அது காற்றுடன் சேர்ந்த நெருப்புப்போல் பற்றிக்கொள்ளும்.

25-கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை..

கௌவை - பிறர்மீது பழிச்சொற்களைச் சொல்லின் எவ்வருக்கும் பகை. எல்லோருக்கும் அவன் விரோதி ஆவான். ஒருவர் மீது வீணான பழிச்சொற்களைக் கூறுவது எல்லாருக்கும் பகையை உண்டு பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பாடசாலை

எங்கள் பள்ளி நல்ல பள்ளி
என்று நானும் சொல்வேன்-அறிவுக்
கண்ணைத் திறக்கும் கோவில்
என்று சொல்லி மகிழ்வேன்...

கல்விச் செல்வம் தந்த ஆசான்
எனது வாழ்வில் தெய்வமாய்-நல்ல
கல்வி கற்ற எனது மனம்
தெய்வம் வாழும் கோவிலாம்...

அன்னை தந்த அன்பு கொண்டு
என்னை நன்கு வளர்த்தனர்-இங்கு
எனது மனதில் எழுந்த ஐயம்
அருகில் நின்று தீர்த்தனரே...

நாளும் நன்கு படித்து நானும்
பள்ளி முதல் மாணவி என்ற
பெயரைப் பெற்றுப் பெரும் புகழை
பள்ளிக்கு நானும் சேர்த்திடுவேன்...

செல்விஸ்சானியா
றீத் மிஷன்
ஜெயபுரம் – கிளிநொச்சி

## காற்று...

காற்றைத் தேடிப்பார்த்தேன்
கண்ணில் படவே இல்லை
காற்றை அலைந்து பார்த்தேன்
காதில் ஊதல் கேட்டென்....

கண்ணில் தெரியாக் காற்று
கடலில் தத்தளிக்கும் காற்று
இதமாய் இருக்கும் காற்று
சுழட்டி அடிக்கும் காற்று

மூக்கின் வழியே செல்லும் காற்று
முக்குளிக்கவும் வைக்கும் காற்று
கற்பனைகள் நிறைந்த காற்று
ஆனால் உருவமும் இல்லாக் காற்று..

உருவம் இல்லா இறைவன்
உருவம் தந்த எம்மை
உருவம் அமையச் செய்வோம்
பார்க்கின்ற காற்றே இறைவன்...

செல்வன் கு கிருசாந்தன்
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்
சந்திவெளி – மட்டக்களப்பு

---

**நன்றிகள்!..**

**மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு**
**மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு**
**செல்வன் சிவகாந்த்-சிவராசா**
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திருந்திய மகள்......

ஒரு ஊரில் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அந்தப் புலவர் மிகவும் பண்புள்ளவராகவும் திறமை மிகுந்தவராகவும் இருந்ததால் பல நண்பர்கள் அவரைப் பார்க்க வருவார்கள். ஒருமுறை புலவர் நோய்வாய்ப்பட்டார். படுக்கையில் இருந்த அவரைப் பார்க்கத் தினமும் நண்பர்கள் வந்தவண்ணம் இருந்தனர். புலவரின் மகளுக்கு வந்திருந்தவர்களை உபசரித்துச் சலித்தே விட்டது.

சலித்துக்கொண்ட அவள் சற்று அலட்சியமாகவே நடந்துகொண்டாள். ஒரு நாள் அடுத்த கிராமத்திலிருந்து ஒரு புலவர் தனது நண்பனைப் பார்க்க வந்தார். சிறிது நேரம் இருவரும் அன்புடன் பேசிக்கொண்டிருந்தனர். படுத்திருக்கும் புலவர் நண்பனை உபசரிக்க எண்ணித் தனது மகளை அழைத்தார். அம்மா இவருக்குப் பருகப் பால் கொண்டுவா... என்று கூறினார். அவள் அலட்சியமாக இருப்பவளாயிற்றே. அவளும் பாலை ஒரு குவளையில் கொண்டுவந்து கொடுத்தாள். அந்தக் காலத்தில் பாலை ஆடை நீக்குவதற்காக துணி வைத்திருப்பார்கள். அந்தத் துணியை ஒவ்வொரு முறையும் வடி கட்டியபின்பு துவைத்து உலர வைத்திருப்பார்கள். ஆனால் அந்தப் பெண் துணியை அப்படியே வைத்திருந்து உபயோகப்படுத்தினாள்.

அதனால் பாலைக் குடித்த புலவர் சற்றே முகம் சுளித்தார். ஏன் புலவரே பால் என்ன கசக்கிறதா?..என்றாள் அந்தப்பெண். உடனே புலவர் புன்னகை மாறாமல் இல்லையம்மா, "பாலும் கசக்கவில்லை, துணியும் கசக்கவில்லை" என்றார். அவள் செய்த தவறைச் சிலேடையாகச் சொன்ன புலவரைப் பார்த்து அவள் மன்னிப்புக் கேட்டாள். மனம் திருந்தினாள் அவள். பெரியோரை அலட்சியப்படுத்தினாலும் அவர்கள் அதை நாகரீகமான முறையில் வெளிப்படுத்துவார்கள். அவர்கள்தான் உயர்ந்தவர்கள். எனவே சிறுவர்களாகிய நாம் யாரையும் அலட்சியப் படுத்தாமல் வாழக்கற்றுக் கொள்வோம்!...

செல்வி ஜதீஸ்குமார் நிவேதா
நீத் மிஷன்
ஜெயபுரம் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எ" எழுத்தில் பழமொழிகள்...

-எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
-எச்சில் கையால் காக்கை விரட்டாதவன் பிச்சை கொடுப்பானா.
-எடுக்கிற பிச்சை ஏறுகிறது பல்லக்கு.
-எட்டிப் பழத்தென்ன ஈயார் வாழ்ந்தென்ன.
-எண் இல்லாதவன் கண் இல்லாதவன்.
-எழுத்து இல்லாதவன் கழுத்து இல்லாதவன்.
-எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.
-எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமல் செய்கிறவன் மட்டி.
-எண்ணிச் செய்வது செட்டு எண்ணாமல் செய்வது வேளாண்மை.
-எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ.
-எதார்த்தவாதி வெகுசன விரோதி.
-எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.
-எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும்.
-எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும் பொன் ஆகுமா.
-எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகா.
-எய்தவன் இருக்க அம்பை நோவானேன்.
-எலி அழுதாலும் பூனை விடுமா.
-எலி இருக்கிற இடத்தில் பாம்பும் இருக்கும்.
-எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
-எருது நோய் காக்கைக்குத் தெரியுமா.
-எலும்பைக் கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா.
-எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா.
-எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
-எறும்பும் தன் கையால் எண் சாண்.
-எதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை.
-எள் என்றாலும் எட்டாய்ப் பரித்து உண்.
-எண்ணுவதைப் பெரிசாய் எண்ணு.
-எட்டாத பழத்திற்கு ஆசைப்படாதே.

செல்வி வி திர்ஷா
றீத் மிஷன்
ஜெயபுரம் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு...

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண் நீர்பூசல் தரும்" -குறள்-

அன்பு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு தொடர்பான உணர்வு ஆகும். பாசம், பக்தி, காதல், நேசம், கருணை என அன்பு பல பிரமாணங்களில் உள்ளன. "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் வள்ளுவர். எல்லா உயிர்களுக்கும் அன்பும் பாசமும் உண்டு. நிறம், அழகு, சாதி, மதம் போன்ற பேதங்கள் கண்டு அன்பு வருவதில்லை. விலை கொடுத்து வாங்க முடியாததும் இந்த அன்பு மட்டுமே.

எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் தன்னலமற்ற தூய அன்பு செலுத்தும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். ஒரு குழந்தை நன்றாக வளர்வதற்கு தாயின் அன்பு மிக, மிக முக்கியமானதாகும். எம்மை அன்பாகவும் பண்பாகவும் வாழக் கற்றுக் கொடுக்கிறார்கள் எம் தெய்வங்கள்.

எல்லா மதங்களும் அன்பையே வலியுறுத்துகின்றன. அன்பு செலுத்துவதற்கு வரைமுறை எதுவும் கிடையாது. அது எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும் வெளிப்படும். "மனமுடைந்து இருப்பவருக்குச் சொல்லப்படும் ஆறுதல் வார்த்தைகள் பசித்த முகம் பார்த்து உணவு கொடுப்பது" என்பன அன்பின் சில வடிவங்களே. நேசிப்பவரை நேசிப்பது அன்பன்று வெறுப்பவரை நேசிப்பதுதான் உண்மையான அன்பு.

மனிதனின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வை அளிக்கக்கூடியது அன்பு மட்டும்தான். "அன்பிற்கு அடிமையாகாதவர்கள் இவ்வுலகில் எவரேனும் உண்டோ" "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் அது உண்மை என்று தானறிதல் வேண்டும்" என்றார் மகாகவி பாரதியார். எனவே சாதி, சமயம், மொழி, இனம், நிறம் எனப்பாராது எல்லா உயிர்கள்மீதும் உண்மையான அன்பு செய்வோம். அன்பாய் ஒற்றுமையாய் நன்றாய் வாழ்வோம்!..


செல்வி நீதினி தவகுமார்
எசன் – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்குப்புதிர் பிரமிட்டு...

கணக்குப்புலிச் சிறுவர்களே பெட்டிக்குள் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...




இந்த இரு படங்களுக்குமிடையே குறைந்தது 8 வித்தியாசங்கள் காணப்படுகின்றன. எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்....



விடைகள் இன்னொரு பக்கத்தில் உண்டு.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடொக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 4

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 1 | | | |
| 1 | | 6 | | | | 4 | | 7 |
| | | | | 9 | | | | |
| 6 | | 8 | | | | 2 | | 9 |
| | | | | 6 | | | | |
| 3 | | 9 | | | | 5 | | 6 |
| | | | | 1 | | | | |
| 4 | | 2 | | | | 7 | | 1 |
| | | | 6 | | 4 | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 93
## (புரட்டாதி--ஐப்பசி-2016)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 கத்தோலிக்க மக்களின் பெருநாள்.

09-10 தின் பண்டம்.

வ – இ:

07-05 இவன் கூவிப் பொழுது விடியும்.

11-10 உடை ஒத்த சொல்.

கீ – மே:

14-10 பதில் ஒத்த சொல்.

16-04 அகிம்சை போதித்தவர்.

மே – கீ:

01-13 ஔவையார் அருளிய நூல் ஒன்று.

11-15 நீண்டகாலம் உயிர்வாழும் உயிரினம்.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்துகொள்வோம்....

-ஒரு சாதாரண மனிதனின் சிறுகுடலின் நீளம் சமார் 4 - 5 மீட்டர் நீளமானதாகும்.
-மனித மூளையில் பார்வை மையம் "முளையம்" என்ற பகுதியில் அமைந்துள்ளது.
-பெண் கடற்குதிரைகள் அண்ணளவாக 200 முட்டைகளை ஆண் கடற்குதிரையின் வயிற்றுள் இடுகின்றன.
-சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்குமுன் இப்பூவுலகில் "டைனோசர்கள்" ஆதிக்கம் நிலவியதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
-யானை ஒரு பெரிய மிருகமாகும். இது ஒருநாளைக்குச் சராசரியாகச் சுமார் 200 லீட்டர்வரை நீர் அருந்துமாம். இது சுமார் 10.000 ஆண்டுகளுக்கு முற்பட்ட உயிரினமாகும். உலகிலுள்ள விலங்குகளில் பெரியதான இதன் குட்டி பிறந்தவுடன் சுமார் 100 - 120 கிலோ நிறையில் காணப்படும். பிறந்து சுமார் 10 வருடங்கள் தாயுடன்தான் வாழுமாம். வளர்ந்த யானை ஒன்றின் நிறை சுமார் 5 - 6 தொன் நிறையுடையதாய் இருக்கும்.

## அறிந்துகொள்வோம்....

-விண்வெளி வீரர் ஒருவர் குறைந்த பட்சம் 1.500 மணித்தியாலங்கள் விமான ஓட்டப்பயிற்சி எடுக்க வேண்டும்.
-முதலாவது செல்லிடத் தொலைபேசியின் பெயர் "டைனா டாக்" என்பதாகும்.
-புளுட்டோ கிரகம் சூரியனை ஒரு தடவை சுற்றிவர 248 ஆண்டுகள் எடுக்கின்றன.
-கண்டங்களின் நகர்வானது வருடத்திற்கு 2.5 சென்டி மீட்டர் அளவில் இடம்பெறுகின்றன. இது எமது கைவிரல் நகத்தின் வளர்ச்சி வீதத்திற்குச் சமமானதாகும்.
-வெந்நீர் சுவையில்லாமல் இருப்பதற்குக் காரணம் நீரைக் கொதிக்க வைக்கும் போது சுவையூட்டும் வாயு வெளியேறிவிடுகின்றது.

செல்வி எஸ் சானியா
சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்.......

256

112 144


48 64 80

20 28 36 44

8 12 16 20 24

3 5 7 9 11 13

1 2 3 4 5 6 7





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பயன்படுத்தப்படும் சில பிரதேச வழக்குச் சொற்கள்.....

ஒரு மொழியில் எப்போதும் பேச்சுமொழி, எழுத்துமொழி ஆகிய இரண்டு வடிவங்களும் பயன்பாட்டில் உள்ளன. மக்கள் அன்றாடத் தொடர்பாடல்களின்போது பேச்சுமொழியைக் கையாள்கின்றனர். அவை உயிர்ப்புடையனவாகவும் மக்களின் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. பிரதேச வழக்கு என்பது குறித்த பிரதேசத்திற்குரிய தனித்துவமான சொல் வழக்குகளைக் கொண்டிருப்பதாகும்.

அந்த வகையில்,

**வடக்குப் பிரதேச வழக்குச் சொற்கள் சில**

ஆறுதலா - மெதுவாக
இயத்து - ஏதனம் - சமையற் பாத்திரங்கள்
எப்பன் - ஒரெப்பன் - சிறிதளவு
கனக்க - நிறைய
கெதியா - விரைவாக
பேந்து - பிறகு - பின்பு
புழுகம் - மகிழ்ச்சி
முடக்கு - பாதைத் திருப்பம்
மோன் - மகன்
மோள் - மகள்
விறாந்தை - முன்கூடம்
வெள்ளாமை - வேளாண்மை

**இதே போன்று கிழக்குப் பிரதேச வழக்குச் சொற்கள்....**

அத்தாங்கு - மீன் பிடிக்கும் கைவலை
அணியம் - தோணியின் முன்பக்கம்
அலவாய்க்கரை - கடற்கரையோரம்
ஆனம் - சொதி , குழம்பு
ஏனம் - பாத்திரம்
ஓண்ணா - முடியாது
ஒள்ளுப்பம் - எள்ளிலும் சிறியது
கக்கிசம் - தொல்லை
கடப்படி - வாசல்
களவட்டி - சூடுபோடுந்தளம்
கெறுவம் - கர்வம்
சங்கை - ரோசம்
சார் - ஏர் செல்லும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மாடு - சுமை தூக்க தலையில் வைக்கும் அடை
சோங்கன் - சோம்பேறித்தனம்
தலைமுறி - வாய்க்கால் பிரிந்து செல்லும் வயற்பரப்பு
துறைக்காரன் - படகோட்டுபவன்
மண்டா - மீன்குத்தும் தடி
வெள்ளோடன் - தேங்காய்

**மேலும் மலையக பிரதேச வழக்குச் சொற்கள்**
எலை - இலை
பொழப்பு - பிழைப்பு
வெரசா - விரைவாக
ஸ்ரோர் - தொழிற்சாலை

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் மேலும் பல வழக்குச் சொற்கள் இருக்கலாம்.... எனினும் சிலவற்றையே இங்கு நாம் குறிப்பிட்டுள்ளோம்.

---

## சிறுவர் தொழிலாளர்கள்....

இலங்கையில் கிட்டத்தட்ட 100,000 சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர், அதில் சிறுமிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில் வீட்டு உதவியாளர்களாகவும் மற்றும் பையன்கள் கிராமப்புறங்களில் விவசாய வேலைகளையும் செய்து வருகிறார்கள். அநேக பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் செல்வது என்பது ஒரு தொலைதூரக் கனவாகவே உள்ளது நிதி, திட்டமிடல் அமைச்சின் 2016 அறிக்கையின்படி...

-சிறுவர்கள் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருப்போர் - 1.07.259 பேர்

-கடின வேலை செய்யும் சிறுவர்கள் - 63.916 "

-சிறுவர்கள் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டோர்..

| | | | |
|---|---|---|---|
| 15-17 வயதினர் | - | 52 | வீதம் பேர் |
| 12-14 " | - | 20 | " " |
| 05-11 " | - | 28 | " " |

-கடின வேலை செய்யும் சிறுவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 15-17 " | - | 87 | " " |
| 12-14 " | - | 11 | " " |
| 05-11 " | - | 02 | " " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

அருளுடைமை: –

241. அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

242. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

244. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

245. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

247. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றாமற் றாதல் அரிது.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

250. வலியார்முன் தன்னை நினைக்காதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (உயிர்களிடம் கருணை கொள்ளல்)

241. பொருள் செல்வம் இழிந்தவர்களிடமும் உள்ளதால செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது அருட்செல்வமே ஆகும்.

242. பல வழிகளிலும் ஆராய்ந்து பார்த்தால் கருணையே உயிருக்குத் துணையாகும். அதனால் நல்வழியை ஆராய்ந்து கருணை கொள்க.

243. அருள் நெஞ்சம் உடையவர் இருள் நிறைந்த துன்ப உலகில் புக வேண்டியது இல்லை.

244. நிலைபெற்ற உயிர்களைக் கருணையால் காப்பாற்றுபவன் தன் உயிருக்குத் தீங்கு வரும் என்ற அச்சம் கொள்ள வேண்டியதில்லை

245. கருணை உடையவர்களுக்குத் துன்பம் இல்லை என்பதற்குத் காற்றுவீசும் வளப்பமுள்ள இப்பேருலகில் வாழும் மக்களே சான்றாவார்கள்.

246. கருணையற்றுத் தீமை செய்பவர்கள் செல்வத்தை இழந்து துன்பத்தை அடைவார்கள் என நல்லவர்கள் சொல்வார்கள்.

247. பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் இன்பம் இல்லாதது போல உயிர்களிடம் கருணை இல்லாதவர்களுக்கு மேலுலக இன்பம் இல்லை.

248. ஊழால் பொருளற்ற வறிஞர் பின் ஒரு காலத்தில் செல்வத்தில் பொலிவர். ஆனால் அருளற்றவர் அதை இழந்தவரே அல்லாமல் பின் பெறார்.

249. தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளை அறிந்ததை ஆராய்ந்தால், அது போன்றதே அருளில்லாதவன் செய்த அறம்.

250 தன்னைவிடத் தாழ்ந்தவரை வருந்தச் செல்லும்பொழுது தன்னைவிட வலிமையுற்றவர்களிடம்தான் அஞ்சி நிற்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## நிறைவு:-

நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்து தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. "எனக்கு ஏன் மதிப்பில்லை" நானும் கல் தானே...என்று ஓலமிட்டது. தெருவோரத்தில் கிடந்த கடப்பாரை கூறியது...."ஏ குறுணி காலம் முழவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்கத் தெருவில் கிடக்கிறாய்" ஆனால் இரத்தினக் கல் அப்படியா?..நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும்வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது. அப்டி என்றால் என்று இழத்தது குறுணிக்கல். கடப்பாரை சொன்னது..

"நிறைவாகும் வரை மறைவா இரு"

## குனிவு:-

குனிந்த தலை குனிந்தபடியே மூட்டை சுமந்து செல்லும் கழுதையை வேம்பில் இருந்த காக்கைகள் கவனித்து வந்தன. ஒருநாள் காக்கைகளில் ஒன்று மற்றதைப் பார்த்து "இந்தக் கழுதைமீது உனக்கு இரக்கம் வரவில்லையா" எப்போது பார்த்தாலும் மூட்டை சுமந்து துன்பப்படுகிறதே...என்று சொல்லிப் பெருமூச்சு விட்டது. "நாம் என்ன செய்ய முடியும் கழுதைதான் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்" என்றது மற்றக் காக்கை. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?.. இறக்கைகளைக் கோதிக்கொண்டே இரண்டாம் காக்கை சொன்னது..

"குனிந்து கொண்டே இருப்பவன்
சுமந்து கொண்டே இருப்பான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வளவு குறியீடுகளை... தெரியுமா உங்களுக்கு...?

ஒரு எழுத்தாக்கத்தை உருவாக்குவதற்கும், உருவாக்கிய ஆக்கங்களை கருத்துப் பிழையின்றி, தெளிவான பொருளை விளங்கிக் கொள்வதற்கும் குறியீடுகள் துணைபுரிகின்றன. குறியீடுகள் அனைத்து மொழிகளுக்கும் பயன்படும். எனவே இவற்றைக் கடைப்பிடிப்பது அனைவரதும் கட்டாயக் கடமையாகும். அந்தவகையில்...

| தமிழ் | ENGLISH | குறியீடு |
|---|---|---|
| காற்புள்ளி | Comma | ( , ) |
| அரைப்புள்ளி | Semicolon | ( ; ) |
| முக்காற்புள்ளி | Colon | ( : ) |
| முற்றுப்புள்ளி | Full stop/Period | ( . ) |
| ஆச்சரியக்குறி | Exclamation Point | ( ! ) |
| கேள்விக்குறி | Question Mark | ( ? ) |
| இடைக்கோடு | Dash/Hypen | ( - ) |
| உடைமைக்குறி | Apostrophe | ( ‘ ) |
| மேற்கோள்குறி | Quatation Mark | ( “ “ ) ( “ ) |
| நிறை நிறுத்தக்குறி | Pound Sign | ( # ) |
| இணைப்புக்குறி | Ampersand/And | ( & ) |
| நட்சத்திரக்குறி | Asterisk | ( * ) |
| தொக்கிக்குறி | Ellipsis | ( ... ) |
| அடைப்புக்குறிகள் | Brackets | ( () ),( {} ),( [] ),( <> ) |
| அடிக்கோடு | Underline | ( Tamil ) |
| கிடைக்கோடு | Underscore | ( _ ) |
| முன்சாயக்கோடு/ குறுக்குவெட்டுக்குறி | Forward slash | ( / ) |
| பின்சாயக்கோடு | Backslash | ( ) |

---

## பகிர்வு...

ஈழமும் தமிழும் யாழ்ப்பாண இராச்சியத்தை அரசாண்ட பரராசசேகரன் என்னும் மன்னன் பல அறிஞர்களை ஒன்றுதிரட்டி பரராசசேகரம் என்னும் பாரிய வைத்திய நூலைத் தொகுத்துள்ளான் என்று தெரியவருகின்றது. இந்நூலிலே 12.000 பாடல்களுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. கம்பராயாமாயணத்திலும் ஏறத்தாழ இந்தளவு எண்ணிக்கையான பாடல்களே காணப்படுகின்றன என்னும்போது பரராசசேகரம் நூலின் பிரமாண்டம் எமக்குப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-153
## (புரட்டாதி - ஐப்பசி 2016)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-04 நாட்டுக்காக உயிர்கொடுத்த தியாகிகள்

08-10 கணவனை இழந்தவர்களை நம்மவர்கள் இப்படியும் அழைப்பர்.

11- 13 சிலர் தமது இதைக்கவனிக்காமல் செலவு செய்வார்கள்.

16-18 நவதானியங்களில் ஒன்று

19-21 உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட பெரும் பிரதேசம்.

**வ-இ**

07-04 நம்நாட்டில் இவரின் நற்போதனைகளை மதிப்பவர்கள் குறைவு.

28-25 மனைவி ஒத்த சொல்.

45-43 உடல் உறுப்பில் ஒரு பகுதி.

49-46 விரைவு என்று கூறலாம்.

**கீ-மே**

28-07 ஒரு சுவை.

45-24 கிறிஸ்த்தவர்களின் பெருநாள்.

46-04 வாழ்க்கையின் அத்தனை அம்சங்களும் அடங்கிய நாலை எழதியவர்.

47-33 தமிழர்கள் இதைக் கண்ணாக நேசிப்பர்.

**மே-கீ**

01-43 வடபகுதியில் ஒரு ஊர்.

16-37 சிந்தனை என்றும் கூறலாம்.

28-42 முடிவு என்று கூறலாம்.

34-48 துணி வகைகளில் ஒன்று.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்.... (கார்த்திகை-மார்கழி மாதம்)

## இலங்கை

03.11.0000-தீபாவளிப் பண்டிகை

10.11.1993-பூநகரி தவளைப்பாய்ச்சல் விடுதலைப்புலிகளின் சரித்திர முக்கியத்துவ தாக்குதல் சுமார் 469 விடுதலைப்புலிகள் இறந்தனர்.

13.11.1999-யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம்மீது இலங்கைப்படைகள் விமானத்தாக்குதல் 10பேர்வரை பலி.

15.11.1505-இலங்கையில் முதன் முதல் போத்துக்சேசர் காலடி வைத்த நாள்.

15.11.1948-மலையகத் தமிழர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டு அவர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்ட நாள்.

16.11.1992-இலங்கை கடற்படைத் தளபதியான கிளான்ஸி பெர்னாண்டோ மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானநாள்.

19.11.1991-விடுதலைப் புலிகளின் தமிழீழ காவற்றுறை ஆரம்பிக்கப்பட்ட நாள்.

19.11.1984-வடபிராந்திய இராணுவத்தளபதி பிரிகேடியர் ஆரியப்பெருமா கண்ணிவெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட நாள்.

20.11.1999-மடு தேவாலயம் மீது விமானப்படைகளின் குண்டுத்தாக்குதல் 42 பேர் பலியானார்கள்.

23.11.1990-மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட நாள்.

27.11.1982-லெப்டினன் சங்கர் நினைவு நாள். பின்னர் மாவீரர் நாளாக மாற்றம் பெற்றது.

01.12.1935-இலங்கையில் முதன்முதல் விமானம் இரத்மலானையில் தரையிறக்கப்பட்டது.

06.12.0000-றம்ழான் திருநாள்.

07.12.1997-விடுதலைப்புலிகளால் "தமிழ்நெட்" என்ற இணையத்தளம் அறிமுகமானது.

12.12.1911-புலோலியூர் நா.கதிரவேற்பிள்ளையால் உருவாக்கப்பட்ட உலகின் முதல் "தமிழ் அகராதி" டில்லியில் வெளியிடப்பட்டது.

12.12.1995-இலங்கைத் தமிழருக்காக முதன் முதல் தீக்குளித்து தியாக மரணம் தியாகி அப்துல் ரவூப் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.12.2000-மிருசுவில் படுகொலைகள் இடம்பெற்ற நாள் சுமார் 50 பேர்வரைஇலங்கைப்படைகளால் கொல்லப்பட்டனர்.

25.12.0000-நத்தார் பண்டிகை.

26.12.2004-சுனாமி இயற்கைப் பேரழி நாள்.

30.12.1924-யாழ் வாலிபர் சங்க மகாநாட்டில் முதன் முதல் சாதி ஒழிப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்ட நாள்.

## பிரபலங்கள்...

04.11.1988-கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் நினைவுநாள். (1905-1988)

07.11.1947-பத்திரிகைத்துறைக்கு உழைத்த மலையகத் தலைவர் நடேசய்யர் நினைவுநாள்.

08.11.1958-வித்துவ சிரோன்மணி ச. கணேசய்யர் நினைவு நாள்.

10.11.1934-தேசப்பற்றாளர் பேராசிரியர் அ.துரைராசா பிறந்தநாள் (10.11.1934-11.06.1994)

22.11.1976-பாராளுமன்ற உறுப்பினர் மு.திருச்செல்வம் நினைவுநாள்(1907-1976)

23.11.1973-பாராளுமன்ற உறுப்பினர் வி அ. அழகக்கோன் நினைவுநாள்.

25.11.1979-பெல்ஜியம் தமிழறிஞர் டெரி நினைவுநாள் (1898-1979)

26.11.1930-சேர் பொன் இராமநாதன் நினைவுநாள் (1851-1930)

05.12.1879-ஆறுமுகநாவலர் நினைவுநாள் (18.12.1822-05.12.1879)

06.12.1982-பேராசிரியர் க.கைலாசபதி நினைவுநாள். (06.04.1933-06.12.1982)

17.12.1975-புலோலியூர் சோ.இளமுருகனார் நினைவுநாள் (11.06.1908-17.12.1975)

## கண்டுபிடிப்புகள்-நிகழ்வுகள்.. (கார்த்திகை--மார்கழி)

01.11.1954-பிரான்ஸ் நாடு பாண்டிச்சேரியை இந்தியாவிடம் ஒப்படைத்த நாள்.

03.11.1916-விற்றமின் "B" யை அமெரிக்காவைச் சேர்ந்த மக்கொரியூம் என்பவர் கண்டுபிடித்தார்.

07.11.1917-ரஷ்ஷியாவில் கம்யூனிச ஆட்சி ஆரம்பமாகியது.

12.11.1492-கொலம்பஸ் அமெரிக்காவைப் போய்ச் சேர்ந்த நாள்.

14.11.0000-உலக நீரழிவு தினம்.

14.11.1922-பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட நாள்.

14.11.1869-பிரான்ஸ் நாட்டவரான புவோடின் என்பவர் "டேபைன் வாயு" வைக் கண்டுபிடித்தார்.

17.11.1869-சுவீஸ் கால்வாய் ஊடாக முதன் முதல் கப்பல் பயணம் ஆரம்பித்த நாள்.

18.11.1935-தொலைக்காட்சி நிகழ்ச்சியை முதன் முதல் ஒளிபரப்பிய நாடு ஜேர்மனியாகும். தலைநகர் பேர்ளின் நகரில் வாரத்திற்கு 3 தடவைகள் ஒளிபரப்பாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.11.1290-முதன் முதலில் மூக்குக்கண்லாடி இத்தாலி நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

21.11.1913-உலகின் மிகப்பெரிய திரைப்படத்துறையான "கொலிவூட்" ஆரம்பம்.

25.11.0000-உலகப்பெண்கள் மீதான வன்முறை ஒழிப்புநாள்.

30.11.1997-பிரித்தானிய அட்சியில் இருந்த கொங் கொங் நாடு சீனாவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்ட நாள்.

01.12.0000-உலக எயிட்ஸ் தினம்.

03.12.1840-இங்கிலாந்தில் முதன்முதலில் வெளியிட்ட "பென்னி" தபால் முத்திரைதான் உலகின் முதலாவது முத்திரையாகும்.

09.12.1510-முதன் முதல் ஆபிரிக்க மக்கள்அடிமைகளாகக் கரிபியன் தீவுகளுக்குக் கப்பல்மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

10.12.0000-சர்வதேச மனித உரிமைகள் தினம்.

11.12.1665-இங்கிலாந்து விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் புவியீர்ப்புக் கொள்கையைக் கண்டுபிடித்தார்.

16.12.0640-பாராசீகர்களால் காற்றாடி கண்டுபிடிக்கப்பட்டது.

18.12.1897-அமெரிக்கரான கிங் சீ கில்லட் என்பவர் முதன் முதல் முகச்சவரக்கத்தியை உருவாக்கினார்.

19.12.1848-முதன் முதல் கம்யூனிசக் கொள்கை ஜேர்மனியரான கார்ல்மாக்ஸ் என்பவரால் வெளியிடப்பட்டது.

20.12.1916-அமெரிக்கப் பெண்மணி மார்க்கிறட் என்பவர் முதலாவது குடும்பக்கட்டுப்பாட்டு மருத்துவ மனையை ஆரம்பித்தார்.

22.12.1950-உலகின் முதலாவது அணுக்குண்டுப் பரிசோதனை பசுபிக் சமுத்திரத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

23.12.1907-அமெரிக்கரான ஸ்பங்கர் என்பவர் தூசு, துகள்களை சுத்தப்படுத்தும் வக்கீம் கிளீனரைக் கண்டுபிடித்தார்.

27.12.1855-ஜேர்மனியரான புன்சன் என்பவர் முதன் முதலில் எரிவாயுவைக் கண்டுபிடித்தார்.

29.12.1972-அமெரிக்கரான வன்டஸசல் என்பவர் முதன் முதலில் சிறிய கையடக்கமான இலத்திரனியல் கல்குலேட்டரைக் கண்டுபிடித்தார்.

## உலகப்பிரபலங்கள்...

01.11.1959-எம்.கே.தியாகராஜபகவதர் நினைவுநாள் (1910-1959)

02.11.1950-அறிஞர் பேனார்ஷா நினைவுநாள்

14.11.1889-இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு பிறந்தநாள்.

18.11.1936-கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரப்பிள்ளை நினைவுநாள் (05.09.1872-18.11.1936)

19.11.1917-இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி பிறந்தநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.11.1917-இந்திய ஜான்ஸிராணி (லக்ஸ்மிபாய்) பிறந்தநாள்.

21.11.1970-பௌதீக விஞ்ஞானி, நோபல் பரிசு பெற்ற தமிழ்நாட்டுத் தமிழர் சேர் சீ வி இராமன் நினைவுநாள்.

22.11.1963-அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி நினைவுநாள்.

23.11.000-சத்ய சாயிபாபா ஜயந்தி தினம்.

30.11.1874-இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் பிறந்தநாள் (1874-1965)

05.12.2013-விடுதலை வீரன், தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி நெல்சன் மண்டலே நினைவு தினம்.

06.12.1956-இந்தி கரிசனமக்களின் தலைவர். இந்தியாவின் அரசியல் யாப்பை வரைந்தவர் டாக்டர் அம்பேத்கார் நினைவுநாள்.

10.12.1833-நோபல் பரிசுக்கு வித்திட்டவர் சுவீடன் நாட்டவரான அல்பிரட் நோபல் பிறந்தநாள் (1833-1896)

11.12.1822-மகாகவி பாரதியார் பிறந்ததினம் (1882-1921)

12.12.0000-நபிகள் நாயகம் பிறந்தநாள்.

14.12.1799-அமெரிக்க முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் நினைவுநாள்.

21.12.1879-ரஷ்ஷிய அதிபர் ஜோசப் ஸ்ரான்லின் பிறந்தநாள்.

24.12.1973-பகுத்தறிவாளர் ஈ வே இராமசாமிப்பெரியார் நினைவுநாள் (17.09.1879-24.12.1973)

24.12.1987-தமிழ்நாடு முதலமைச்சர் நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் நினைவுநாள் (17.01.1917-24.12.1987)

24.12.1524-கடலோடி வஸ்கொடகாமா நினைவுநாள் (1460-1524)

26.12.1893-சீனாவின் சிற்பி சீனப்பிரதமர் மாவோசேதுங் பிறந்தநாள்.

---

## பொன்மொழிகள்...

-பதறிச் செய்கின்ற காரியம் சிதறிக் கெட்டுவிடும்.

-கொடுப்பதற்கும் சேமிப்பதற்கும் அறிவு வேண்டும்.

-பல துறைகளில் அறிவு இருப்பது தேடற்கரிய செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணங்கள் தொடரும்...

கல்லும் முள்ளும்
பாதைகள் கடந்தோம்
நினைத்ததை அடைந்தோம்
கோபுரத்தின் உச்சி வரை
ஏறியே விட்டோம்
என எண்ணாதே மனமே
ஒருநொடியில் நிலமைகள் மாறலாம்
நினைவுகளும் மாறலாம்

தரையிலும் நீரிலும்
ஆகாயத்திலும் கூட
பயணங்கள் தொடரலாம்
நேரான பாதை மாறி
குச்சு ஒழுங்கையும் வரலாம்
வளைவுகள் நெளிவுகள் கண்டும்
பாதை ஓடலாம்
நாடுகள் மாறலாம்
வீடுகள் மாறலாம்
உறவுகள் மாறலாம்
உணர்வுகளும் மாறலாம்
முடிவு இல்லாமல்
பயணம் தொடரலாம்
போகும் இடம் எங்கும்
பொருட்களை சுமக்கலாம்

பயணம் முடியும்
கல்லறை சேர்கையில்
அங்கு தூக்கிச் சுமக்க
எமது பொருள்கள் இல்லை
எம்மை சுமக்க நாலு பேர் வருவர்
நாம் பாவம் புண்ணியம்
என்பதை சுமந்து
எம் பயணத்தை முடிப்போம்
அது வரை தொடரும் பயணம்
பாதைகள் மாறினும்
பயணம் தொடரும்....

கவி மீனா – ஜேர்மனி.

# முகமூடி.....

உணர்வுகள் தொலைத்து
உண்மைகள் புதைத்து
உருவம் மாற்றி
உள்ளமும் தேற்றி
உறுத்தும் வாழ்வின்
உண்மை மறைத்து
உலவும் மனிதர் உலகில் கோடி

உடையும் நடையும்
களையும் இழந்து
உருக்குலைந்து
உருட்டிடும் ஆயுள்
உலகுக்கு மறைக்க
உதவிடும் தருணம்
முகமூடி என்னும்
முக்காட்டுக் கவசம்

பலவேடம் இட்டு
பல்லிளித்து நின்று
பாசாங்கு பசப்பில்
சுயந்தனைக் களைந்து
பரிமாணம் கொண்ட
கனவானாய் மின்ன
பலநேரம் துணையாகும்
முகமூடி வேஷம்

முகமூடி களைந்து
முழுதாய் ஓர்நாள்
உளமார வாழ மனதார ஏக்கம்
உணர்வுகள் மரத்து
ஜடமாகும் முன்னே
முகமூடி இல்லா
ஓர் நாள் வருமா ?

கீத்தா பரமானந்தன் – ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்த்து பாலகனின் வருகை...

திருமதி.ஜெயா நடேசன் - ஜேர்மனி



காரிருள் பரந்த இரவு
வரலாறு படைத்த இரவு
மார்கழியில் தேவையான இரவு
அன்னை மரியாள் தன் உதிரத்திலே
சுமந்து பெற்ற இரவு - குளிர்
காலத்தின் தேவையால்
காத்திருக்கும் மக்களுக்கு
அற்புதமாய் அவதரித்த பாலகனே
உம் வருகையும் மலரொன்று பூத்ததுபோல்
போற்றுதற்கரிய பாலகனாய்
கடவுள் திருவடி இடையர் வணங்கிட
மெஞ்ஞானிகள் காணிக்கை வழங்க
அவனியே வியக்கும் வண்ணம்
மார்கழி மலராக யேசு மன்னவன்
மண்ணகத்தில் கிறிஸ்த்து பாலகனாக
பூவுலகத்திற்கு வருகை தந்தாரே!...

---

# நத்தார் நல் வாழ்த்துக்கள்!....

வாசகர்கள், எழுத்தாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய நத்தார் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் அமைதியும் சமாதானமும் நல்வாழ்வும் கிடைக்கட்டும் என வாழ்த்துகிறோம்!...

ஆசிரியர் - மண் சஞ்சிகை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேசங்கள்.......

வேகமான வாழ்க்கைப்பயணத்தில்
வேசங்கள் அதிகம் துளிர்ப்பதுண்டு
பாசமான உள்ளங்களாக
பலர் காட்டுவதால் வேசங்கள்
வெளிப்படையாக தெரிவதில்லை

உலகம் என்ற நாடகமேடையில்
உணர்வோடு நடிப்பர் பலர்
வாழ்க்கை என்ற வசந்தம்
கருகுவது பாதி வேசத்தாலே!

நாளைய வாழ்வு நயமாய் உருள
பாதைகள் தெளிவாக அமையணும்
வேசம் கலந்த வாழ்வு வெறுமைகள்
நிறைந்த வெற்றுக்கடதாசிகள்!

உண்மைக் காதல்
உதயசூரியனாய் சுடர்விடும்
ஊடலும் கூடலும்
உணர்வோடு பரிமாறும்
வேசங்கள் வேடங்களாக
நடிக்கப்பட்டாலும்
வேதனைகள் அதற்குள்
வெந்து சாகும்

உண்மைகள் உறங்குவதில்லை
நன்மைகள் மீட்டிப்பார்ப்பதில்லை
வேசங்கள் வேரோடு அறுந்து
பாசங்கள் பகல்போல ஒளிரட்டும்....

கவி – நகுலா சிவநாதன்

## கண்ணதாசனை பார்த்து நீ கவிஞனா? என கருணாநிதி கேட்டதற்கு கண்ணதாசன் எழுதியகவிதையை பாருங்கள்......

அஞ்சாதா சிங்கமென்றும்
அன்றெடுத்த தங்கமென்றும்
பிஞ்சான நெஞ்சினர் முன்
பேதையர்முன் ஏழையர் முன்
நெஞ்சாரப் பொய்யுரைத்து
தன்சாதிதன்குடும்பம்
தான்வாழ தனியிடத்து
பஞ்சாங்கம் பார்த்திருக்கும்
பண்புடையான் கவிஞனெனில்
நானோ கவிஞனில்லை
என்பாட்டும் கவிதையல்ல.
பகுத்தறிவை ஊர்க்குரைத்து
பணத்தறிவை தனக்குவைத்து
தொகுத்துரைத்த பொய்களுக்கும்
சோடனைகள் செய்து வைத்து
நகத்து நுனி உண்மையின்றி
நாள்முழுதும் வேடமிட்டு
மடத்தில் உள்ள சாமிபோல்
மாமாய கதையுரைத்து
வகுத்துணரும் வழியறியா
மானிடத்து தலைவரென்று
பிழைத்திருக்கும் ஆண்மையில்லா
பேதையனே கவிஞனெனில்
நானோ கவிஞனில்லை
என்பாட்டும் கவிதையல்ல.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கவிதை (மண் இதழ்-179)

# அகிலத்தின் அன்னை.......



எண்ணங்களில் விசாலமாகிஎடுத்தஎவற்றையும் விரிவாக்கி
ஏழேழுயென்மத்துக்கும் எம் இதயங்களில் வெளிச்சமாகி
கண்களிலேஒளிச்சுடராகிதூயகருத்துக்களில் உறுதியுமாகி
காலகாலமாய் எம்மனங்களில் கவிநறுகாப்பியங்களாகி
பண்களுக்குள் பாடலாகிபகுத்தறிவினில் நற்பாடங்களுமாகி
பாரேதுதிக்கின்றஉம்மைநாம் பணிந்தேபோற்றுகின்றோம்..!

கிண்ணத்தில் அமுதமாகிகிறங்கவைக்கின்றதேன்சுவையாகி
கீழ்வானின் ஒளிப்பிழம்புகளாய் கிடைத்தற்கரியபொக்கிசங்காகி
விண்ணோர்க்குவிருந்தினர்களாகிவிசும்பிலும் விசாலமாகி
வீரியசக்திகளாகிஎன்றைக்கும் விளம்பிடும்வகைசக்திகளாகி
அண்ணாந்துபார்த்துயாவரும் ஆச்சரியப்படும் கற்பகதருக்களாகி
அழியாப்புகழோடுஎன்றும் அமைந்தஉமைத்துதிக்கின்றோம்...!

வண்ணத்தில் பதினான்காகி புதுவானவில்கள் இரண்டாயாகி
வரையாதுஉரைக்கின்றநல்லவார்த்தைகளில் பொருளுமாகி
திண்ணியகருத்துக்களாகிதிசையெங்கும்பரவும் ஒளிச்சுடராகி
தீந்தமிழ் திரவியத்தின்வேர்களைத் திக்கெட்டும்தேடும் ஆய்வாகி
மண்ணிற்குமகுடங்காகிமாண்புறுஉயர்ந்துநின்றவரைகளுமாகி
மனிதத்துக்குமாட்சிகளாகியவரேஉமைமனதாரஆராதிக்கிறோம்..!

உண்ணற்கரியஅமுதமாகிஉய்விப்பதற்காகவேவந்தஉதயமாகி
ஊருக்குள் பிணிகளுக்கெல்லாம் உயர்வானமருத்துவப்பொருளாகி
வெண்மைக்குள் வெண்மையாகிவிரிந்தவான்பரப்பில்நீலவர்ணமாகி
வேரினைப்பதியம் வைத்துவிட்டுஎமக்குவிடியலின் வெளிச்சமாகி
தண்ணீரின் ஊற்றுக்களாகித்தவமியற்றிடாதுவந்தவரங்களுமாகி
தரணியின் பசுமையானஉம்முடையதாழ்தொட்டுவணங்குகிறோம்..!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன்மண்டேலா எனும்நெருப்பு.....

**18.7.1918 - 05.12.2013**



மறக்கமுடியாதுமானிடத்தின் மாபெரும் அங்கமாயானவர் நீ
மனிதத்தைத்தேக்கிவைத்தமாணிக்கமாய் ஒளிர்ந்தவர் நீ
துறக்கமுடியாததுயரங்களைத் துடைக்கத்தவமியற்றிவரும்
துருவத்துவடிவெள்ளியாய்த் தூரத்தே இலங்கியவரும் நீயே..!

இறப்பைக்கூட இன்பமாகவேஎதிர்கொள்ளப் பண்பட்டவர் நீ
இவ்வுலகின் ஏற்றத்தைஎண்ணியஏந்தல்களில் முதலானவர்நீ
சிறக்கவழிகள் பலவிருந்தும் சிறையில் நீண்டுவாழ்யமாமலரும்
சிந்தியகுருதிக்குவிலையை இனச்சிறப்புக்காய் கொடுத்தவரும்நீயே.

பறந்திட இறகைப்பெற்றிடாமலேவானில்பறவையாய்ப் பறந்தவர்நீ
பாரினில் நிறவெறிக்கெதிராய் பட்டினியைஆயுதமாய் ஆக்கியவர் நீ
உறக்கத்தைதவமாய்க்கொண்டுஉலகினைவிளிக்கவைத்தவரும்
உள்ளங்கள் அனைத்திலும் மிகமிகஉயரத்தில் இருப்பவரும்நீயே..!

மறுக்கப்பட்ட இனஉரிமைபெற்றிடமரணத்துக்கும் அஞ்சாதவர் நீ
மானிடத்தின் விடிவைத்தேடியமாணிக்கமாகவேஒளிர்ந்தவர் நீ
திறக்குமடியாத இதயங்களின் அகிம்சைத் திறவுகோலானவரும்
தீயாகஎழுந்துநின்றுஉரிமைத் தீபமாய் பிரகாசித்தவரும் நீயே..!

அம்பலவன் புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்குப் பெருமை....

கௌசி - ஜேர்மனி

சொந்தமெனபந்தமெனநானிருந்தேன்
சொல்லாமல் பிரிந்துசென்றமாயமென்ன
கள்ளமெனகாதலதுகலந்துவிட்டதால்
கன்னியெனபோட்டுவைத்தகட்டுக்காவல்
கடந்துசென்றுகலங்கவைத்தாள் கன்னியவள்

என் மனதிற்குள் பூட்டிவைத்த அழகுக் கல் ஒன்று அன்பு என்னும் உப்புநீர் பட்டுக்கரையும் தாயன்பைப் புரிந்துகொண்டு பந்தத்தைத் தங்கவைக்கும் என்றெல்லாம் மனக்கணக்குப் போட்டுவைத்திருந்தேன். ஆனால்,தன் மனக்கோட்டையினுள் சிற்பமாய்ச் செதுக்கிவைக்கவென மருமகன் என்றுநான் அழைக்கவேண்டிய மன்மதன் கவர்ந்துசென்றுவிட்டான். எங்கேசென்றார்? என்ற எண்ணம் மட்டுமன்றி, எப்படிவாழ்கின்றார்? என்ற எண்ணமும் மேலோங்க ஆராயத் தொடங்கினேன். அடிக்கடி வந்துபோகும் என் மகள் செல்லச் சிரிப்பும் செல்வாக்கு வாழ்வும் நிலை குலைந்து தடுமாறிவிடுமோ என்று தாயன்பு தவித்தது. என்தோழியை வேவுபார்க்க அனுப்பினேன். சென்றவள் திரும்பிவரும் நாளை எந்தன் மனமும் கண்களும் தேடி ஏங்கித் தவித்திருந்தன.

தோழியும் வந்தாள்,என் காதில் தேனள்ளிச் சொரிந்தாள். படகுக் காரில் பறந்து வந்த என்மகள் பளிங்குவீட்டினுள் நுழைந்தாளாம். விலையுயர்ந்த ஆடையை வீட்டாடையாய் உடுத்தினாளாம். அதிநவீன சமையலறையினுள் புழுவடிவாய் நழுவிவிழும் நூடில்ஸ்ஸை ஆயிரம் தடவை உருசிபார்த்துச் சமைத்தாளாம். உள்நுழைந்த கணவனை அன்பாய் அழைத்து அக்கறையாய்ப் பரிமாறினாளாம். அவனும் ஆஹா.... அபாரச்சுவை என்று கூறித் தித்திப்பாய் ஒருமுத்தமும் தந்தானாம் எனமறைவினின்று பார்த்த என் தோழிமகிழ்வாய் என் காதில் தீஞ்சுவைதந்தளித்தாள்.

விலையுயர்ந்த ஆடை,அதிநவீன சமையலறை,படகுக்கார்,பளிங்குவீடு அத்தனையும் அவள் சீர் சிறப்புமிக்க வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியது. தன் கையாலே உணவைச் சமைத்துப் பரிமாறும் பக்குவத்தில் அவள் பொறுப்புணர்ச்சியும், அன்பும் ஆழமாய்த் தெரிந்தது. உணவின் சுவையை இரசித்த என் மருமகன் வெளிப்பாட்டின் தன்மையில் மனங்கோணாது என் மகளை என் மருமகன் தன் மனச்சிறையில் வைத்திருக்கும் மாண்பை எண்ணி மனமகிழ்ந்தேன். இதைவிடச் சீர்பெற்றவாழ்வை எங்கேயான் என் மகளுக்குப் பெற்றுக் கொடுக்கப் போகின்றேன் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுமனதார அவள் வாழ வாழ்த்துகளை வழங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காட்சி...

முளிதயிர் பிசைந்தகாந்தள் மெல் விரல்
கழவுறுகலிங்கம் கழாதுஉடீ
குவளைஉண்கண் குய்ப்புகைகழமத்
தான் துழந்துஅட்டதீம் புளிப் பாகர்
இனிது என் கணவன் உண்டலின்
நுண்ணுதின் மகிழ்ந்தன்றுஒண்ணுதல் முகனே!...

எனச் செவிலித்தாய் நற்றாய்க்குப் பகர்ந்த தாயான குறுந்தொகைப் பாடலைஎன் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தியது.

காதல் என்பதும், காதலனுடன் களவொழுக்கம் மேற்கொள்ளலும், உடன்போக்கும் எக்காலத்தும் நடைபெறும் நிகழ்வே. தக்க காதலனுடன் தன் மகள் மணாளனின் மனமென்னும் அரியணையில் சிறப்பாய் வீற்றிருந்தால் சிந்தையில் சஞ்சலம் கொள்ளாது வாழ்த்துதலே அன்னைக்குப் பெருமை. தன்னை மறந்தால் என்னும் வாஞ்சைபெற்றோர்க்கு வேண்டாம். அவள் அவளுக்காகவே பிறந்தாள்.

பொருள் விளக்கம் அறியவிரும்பும்வாசகருக்காக:

இப்பாடல் கூடலூர் கிழாரினால் குறுந்தொகையில் பாடப்பட்ட 167 ஆவதுபாடல்

விலைமதிப்பற்ற பட்டாடையை அணிந்த தலைவி காந்தல் போன்ற மெல்லிய விரல்களால் தயிரைப் பிசைகின்றாள். புளிக்குழம்பு அடுப்பிலே வைக்கப்பட்டிருக்கின்றது. தன்னுடைய கைகளைக் கழவாது தான் அணிந்திருக்கும் பட்டாடையில் கைகளைத் துடைத்தபடி தாளிதம் செய்கின்றாள். அடுப்பிலே வைக்கப்பட்ட குழம்பிலிருந்துவரும் புகை கண்களில் கண்ணீரைவரச் செய்கின்றது. இவ்வாறு செய்து பரிமாறப்பட்ட உணவை உண்ட கணவன் இனிது என்று தலைவியைப் பாராட்டுகின்றான். இதுவே பாடலின் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு நம்மை அணுகும்போது........

திருமதி ஜெயா நடேசன்-ஜேர்மனி

எவராலும் தடுக்க இயலாதது. ஓடி ஒளித்துக்கொள்ள இயலாதது. நிட்சயிக்கப்பட்ட உண்மைதான் எங்கள் இறப்பாகும். அதன் முன்னால் அனைவரும் தோல்வி அடைவர். எல்லோரும் நடுங்கிப் பயப்படுவர். வல்லவனும் பலவீனமானவனும் செல்வந்தனும் ஏழையும் யாரானாலும் சாவு என்பது உறுதியானதாகும். எந்த ஒரு சக்தியாலும் மருந்தாலும் ஒருவரை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற முடியாது. எல்லா உயிர்களும் இறந்தே ஆகவேண்டும் என்பதுதான் கடவுளின் நியமம். இலை அடர்ந்த மரத்தின் சில இலைகள் உதிர்கின்றன. சில இலைகள் தளிர்க்கின்றன. ஊனும் உதிரமும் கொண்ட மனித இனத்திலும் சிலர் இறப்பர் சிலர் பிறப்பர். இது இயங்கியலின் நியதியாகும்.

யார்தான் சாக விரும்புவார்கள். விண்ணகம் செல்ல நினைப்பவர்கள்கூட உடனடியாகச் சாக நினைப்பதில்லை. தவறு செய்யக்கூடாது என்று கருதுவதுமில்லை. இன்று நாள் நாளை நீ என்று ஒவ்வொரு சாவும் நினைவூட்டப்படுகின்றது. அதனால் நாம் நல்லவர்களாக வாழ முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் மரணம் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. இவ்வுலகில் நமக்குச் சொந்தம் என்று நாம் நினைத்தவை உண்மையில் நமக்குச் சொந்தம் அல்ல என்றும், நாம் செய்யும் செயலுக்கேற்ற கைமாறுதான் கிடைக்கும் என்றும், மறு உலக வாழ்வுக்குச் செல்வதற்குமான பயணம்தான் இவ்வுலக வாழ்வு என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மனிதவாழ்வு நீர்க்குமிழி போன்றதாகும். வானத்தில்ப் பறக்கும் பறவை தடயமட எதுவும் விட்டுச் செல்வதில்லை. அதைப்போன்று மனிதர் அனைவரும் மண்ணுலகிலிருந்து மறைந்துவிடுகின்றனர். மனிதரின் வாழ்நாள் வயல்வெளியில் காணப்படும் புல்லைப்போன்று உலர்ந்து போகும். கண் இமைக்கும் நேரத்தில் முடிந்துவிடும். கல்லறைகள்தான் அவர்களுக்காகக் காத்திருக்கின்றன. இதை உணர்ந்தவர்கள் தங்களுடைய சாவைக்குறித்து சிந்திப்பார்கள். தாம் செய்த பாவங்களுக்காக மனம் வருந்துவார்கள். கண்ணீர் சிந்திப் பாவ மன்னிப்புக்காக அழுது புலம்புவார்கள். சாவை ஆயத்த நிலையில் எதிர்கொள்ள கருத்தாய் இருப்பர்.

பட்டு நூலான கூட்டில் நலமாக சுகமாக வாழ்கிறது புழு ஒன்று. ஆனால் அது கூட்டைக் கிழித்து வெளியே வந்தால்த்தானே அழகான பட்டாம் பூச்சியாக முடியும். அதேபோல் உடல் என்னும் கூட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு ஆன்மா வெளியேறினால்தான் வர்ணிக்கமுடியாக விண்ணக நற்பேறு கிடைக்கும். ஆனால் மரணம் என்னும் வழியில் நாம் தனியாகத்தான் செல்ல முடியும். நாம் செய்த நல்ல காரியங்கள் மட்டும்தான் நம்மோடு வரும். எனவே நமது வழிகளைச் சீராக்குவோம். மரணத்தை அச்சமின்றி வரவேற்போம். இறைவனிடம் நம்பிக்கை வைத்துச் சாவுக்காகச் செபிப்போம்!...

# செய்திச் சிதறல்கள்...........

இலங்கையில் அதிகமாக தற்கொலை செய்து கொள்ளும் இளம் பெண்கள்! அதிர்ச்சி ரிப்போர்ட் இலங்கையில் 16 - 25 வயதிற்கு உட்பட்ட இளையோர் தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் இளம் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமூக மருத்துவ ஆலோசகர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார். தற்கொலை செய்துக் கொள்வது இலங்கையின் பிரதான சுகாதார மற்றும் பொருளாதார பிரச்சினை என்று கூறுவதில் தவறில்லை. ஏன் என்றால் இலங்கையில் 2015ஆம் ஆண்டில் தற்கொலையின் மூலம் மாத்திரம் 3051 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

கடந்த யுத்தத்தின் போது கடுமையாக பாதிக்கப்பட்ட வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களை பிரதேச சபை தெரிவித்துள்ளது. அதன் படி போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் 1914 உள்ளதாக பிரதேச செயலகப் புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும் தாய்தந்தையரை இழந்த 83 சிறார்களும் 2055 முதியோரும் 574 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் வசித்து வருவதாக பிரதேச செயலகப்புள்ளி விபரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதே வேளை 574 மாற்றுத்திறனாளிகளில் 211 பேருக்கு மட்டுமே சிறுதொகை மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் வாழும் ஒரு லட்சத்து 92ஆயிரத்து 691 குடும்பங்களில் 34 ஆயிரத்து 619 குடும்பங்கள் விதவைக் குடும்பம் என மாவட்டச் செயலகத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.யாழ்ப்பாணம் அரச அதிபரின் கீழ் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தம் 1.92, 691 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களில் 34 619 குடும்பங்கள் விதவைக் குடும்பங்களாகவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஆம் ஆண்டு முதல் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரையில் நாடளாவிய ரீதியில் 777 கொலைகள் இடம்பெற்றுள்ளதோடு மேல் மாகாணத்தில் 218 கொலைகளும் வடக்கு கிழக்கில் 96 கொலைகளும் பதிவாகியுள்ளதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய வரட்சியான காலநிலையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வரட்சியால் நாடு முழுவதும் 3,38,213 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்

சிறிலங்காவில் பெண்களின் சராசரி ஆயுள்காலம் 78.6 ஆண்டுகளாக இருக்கும் அதேவேளை, ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 72 ஆண்டுகளாகவே இருப்பது அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. 1962-64 காலப்பகுதி வரையில் சிறிலங்காவில் பெண்களின் சராசரி ஆயுள்காலம் ஆண்களை விடக் குறைவாகவே இருந்தது.1920-22 ஆண்டு காலப்பகுதியில், ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 32.7 ஆண்டுகளாகவும், பெண்களின் சராசரி ஆயுள் காலம் 30.7 ஆண்டுகளாகவுமே இருந்தது. கடந்த ஒன்பது பத்தாண்டுகளில் இந்த நிலை பெரிதும் மாறியிருக்கிறது.அம்பாறை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக பெண்களின் சராசரி ஆயுள்காலம் 81.1 ஆண்டுகளாக உள்ளது. அதையடுத்து மாத்தறையில் 80.2 ஆண்டுகளாகவும், காலி மற்றும் கம்பகாவில் 79.9 ஆண்டுகளாகவும் பெண்களின் சராசரி ஆயுள்காலம் உள்ளது.அதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே அதிகபட்சமாக ஆண்களின் சராசரி ஆயுள்காலம் 74.2 ஆண்டுகளாக உள்ளது. அதையடுத்து, மாத்தறையில் 73.9 ஆண்டுகள், இரத்தினபுரி மற்றும் மொனராகலவில் 73.7 ஆண்டுகளாக ஆண்களின் சராசரி ஆயுள் காலம் உள்ளது.ஆண்கள் மற்றும் பெண்களின் ஆகக்குறைந்த ஆயுள்காலம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளது. இங்கு ஆண்களின் ஆயுள் காலம் 60.9 ஆண்டுகளாகவும், பெண்களின் சராசரி ஆயுள்காலம் 72.9 ஆண்டுகளாகவும் உள்ளன.

அதிகரிக்கும் குழந்தைக் கடத்தல் பெற்றோர்களே உஷார்!தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 35 சதவீதத்தினர் பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்கள். இவர்களில் ஒருநாளைக்கு சராசரியாக இரண்டு குழந்தைகள் கடத்தப்படுகின்றனர். குறிப்பாக தமிழகத்தில் கடந்த ஓர் ஆண்டில் மட்டும் 600-க்கும் அதிகமான குழந்தைகளும், இந்த ஆண்டில் மட்டும் 200-க்கும் அதிகமான குழந்தைகளும் கடத்தப்பட்டுள்ளதாக கூறுகிறது ”மிஸ்ஸிங் சைல்டு பீரோ” அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!..

ப – பசுபதிராசா – ஜேர்மனி

எம் பயணப்பாதையில் எப்போதுமே வீசுகின்றது புயல். ஆனால் ஈழத்தமிழ் மக்களாகிய நாங்கள் எப்போதாவது குளிர்த்தென்றல் எம்மைத் தீண்டுமா?. என்று நம்பிக்கையுள்ள அடிவானங்களை அண்ணார்ந்து பார்த்தபடி இருக்க, எப்போதும் போலவே ஓயாது புயலோசைகள் எங்கள் காதுகளைக் கிழிக்கின்றன. நல்ல எண்ணங்கள் எங்கிருந்தாவது எம்மை எட்டிப்பார்க்குமா? எங்கள் பாவங்களும் கழுவப்படுமா? எனத் தேவதூதர்களை தேடுகின்றோம். ஆனால் எங்கும் கழுமரக் காவலர்களே கத்தி தீட்டுகின்றனர். ஆனாலும் இது நிஜங்களைத்தேடி அலையும் நெடும் பயணம். தட்டக்கூடிய கதவுகள் எங்கிருந்தாலும் தட்டிக்கொண்டே இருப்போம். இது வல்லவர்களின் வலிமைகளால் வடிவமைக்கப்பட்ட கதவுகள். ஆனால் நாங்கள் வேண்டி நிற்பது தர்மத்தின் திறவுகோல். அது என்றாவது கிடைக்கும்.

நூறு வருடங்களான இனப்பிரச்சனை, முப்பது வருடங்களான அரசியல் போராட்டம், முப்பது வருடங்கள் ஆயுதப்போராட்டம். இதுவரை சுமார் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐம்பதாயித்துக்கும் அதிகமான போராளிகள் கொல்லப்பட்டனர். பத்துலட்சம் பேர்வரை வெளிநாடுகளில் தஞ்சம், ஐந்து லட்சம் பேர்வரை உள்நாட்டில் அகதிவாழ்வு. அதுவும் முள்வேலி முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கும் அவலங்கள் நீண்டு கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களில் எம்மை அரசியல் ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் நடாத்திவந்த தலைமைகளின் நேர்த்தியற்ற சிந்தைகளால் எம்மேல் திணிக்கப்பட்ட விளைவுகளின் பலாபலன்கள். இருக்கட்டும் இவைகளை இனிமேல் பேசுவதும் எழுதுவதும் தேவையற்றது. ஆனால் இதன் அனுபவங்களை எழவதற்கான படிகளாய் கொள்வது என்பது மட்டும் தவிர்க்கவே முடியாது.

ஒரு விடுதலைப்போராட்டம் தோல்வி அடைவது உலகில் நடந்திருக்கக்கூடியதுதான். ஆனால் ஈழத்தமிழரின் விடுதலையின் வீழ்ச்சி என்பது வெறும் சிங்கள அரசின் போர் யுத்தி என்பதைவிட தமிழர்களின் விடுதலை நோக்கிய செயற்பாடுகளிலேயே அதிகம் தங்கியிருக்கின்றது. சரி அந்த வீழ்ச்சிக்குப் பின்பும் சரி பிழைகளைக் களைந்து நேர் செல்லக்கூடிய அணுகுமுறைகளைக் கண்டறிந்தார்களா? என்றால் அதுவும் இல்லை. ஆரம்பத்திலேயே ஆயிரக்கணக்கான முரண்பாடுகளால் கூர்மையடைந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவுகள் யார் யாரையோ குற்றம் சுமத்தி வெகுஜனங்களின் பாரிய நம்பிக்கையை, எதிர்பார்ப்பை வெறும் ஏமாற்றத்திற்கு உட்படுத்தி பெரும் விரக்தியின் எல்லையிலே கொண்டுபோய்விடும் ஈனச்செயலுக்கு உட்படுத்தினர். அரசியலின் தேவை எல்லா மக்களின் கவனத்தை ஈர்க்கப் பிரிவினைவாதம் என்பது மட்டுமே பெரும் குரலாய் ஒலித்தது. அதன் சாதக பாதக நிலைகளை எடுத்துக்கூற எந்தத்தரப்பும் இடந்தரவில்லை.

இப்போராட்டம் முற்று முழுதான எசமானிய விசுவாசம் என்பதன்கீழ் கைகட்டிச் சேவகம் செய்யும் வடிவாய், எம் இரத்த அணுக்களிலே ஊறிப்போன சாதிய சமயச் சம்பிரதாயங்களில் சாயலாக நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த ஒருவகை உணர்ச்சிகளின் உந்துதலே தவிர வெகுஜனப் புரட்சிக்கான மதிப்பீடு என்பது மருந்துக்கும் கவனத்தில் இல்லை. இங்கே உயிர்தவிர உடமைகளற்ற ஏழைகளும் கொள்கை தமிழீழம் மீட்பதாகப் பேசிக்கொண்டவர்கள் உடமையுடையோர் அகதிகளாகப் புலம்பெயர்ந்து உயிர்ப்பிச்சை கேட்டுப் பயணம் போவதுமான துர்ப்பாக்கியம் என்றும் இணையாத பாகுபாடுகளின் விரிசல்களே. வெகுஜனங்களின் மேல் அபிமானங்கொண்டு விடுதலை வேள்விகள் இருந்திருக்குமானால் ஒரு இயக்கத்தின் கீழ் அதன் கட்டுப்பாட்டில் வாழ்ந்த மக்களை இன்னோர் அமைப்பு இராணுவத்தினருடன் சேர்ந்து ஆக்கிரமித்த பின்பு தண்டிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அது இருவகையினருக்கும் பொருந்தும்.

இந்த வக்கிரங்களின் நீட்சியை இயற்கையும் அங்கீகரிக்கவில்லை. எல்லாவற்றையும் விட இலட்சியத்துக்குப் போராடி இறந்தவர்கள் துதிக்கப்படவேண்டியவர்களே. ஆனால் அந்த இலட்சித்துக்காக உழைத்து இன்னமும் குற்றுயிராய் குறையுயிராய் விழுப்புண் ஏற்று வன்னி மற்றும் தமிழ்ப்பிரதேசங்களில் போராளிகள் சொல்லொணாத் துயர்களுடன் அனுதினமும் போராடுவதைப் பார்த்து அதற்கு ஆவன செய்யாமல் மிகுந்த பணச்செருக்குடன் வாழும்இவ்விடுதலையால் சம்பாதித்த ஈழ அபிமானிகள் முகத்தை மூடிக்கொள்வதும் ஏன்?பண்பாடும் கலாச்சாரமும் மறைந்துவிடக்கூடாதென்று அதைக் கட்டடம் கட்டிக் காப்பாற்றத் துடிக்கும் பண்பாட்டுக் காவலர்கள் மற்றவர்கள் வாழ்வே மகா உன்னதம் என உழைத்தவர்களின் பண்பைக் கண்டறியாமல் விட்ட பண்பு எந்தக் கட்டிடக் கல்லறைக்குள் வைத்துக் கட்டப்படப் போகிறது?

போராட்டக் காலத்தில் எவ்வளவு பொருளாதாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உணவு போடும்
மனிதர்களுக்கே உணவாகும்
வெள்ளாடுகளின் நிலையை ஒத்தது
போலும். எல்லா மக்களும் சமம்
என்னும் நீதி இன்று மட்டுமல்ல
என்றுமே வளர்ச்சி பெறாத
தொன்றாகவே எம்மத்தியில்
இருப்பதால் எந்தப் போராட்டமும்
வெற்றி பெறவே முடியாது. ஒரு
உண்மை கசப்பானதுதான்.
ஆனால் உண்மை அது எப்படி
எனில் விடுதலைக்கும் தமிழ்
மண் மீட்புக்கும் அடித்தளம்
இட்டுக்கொடுத்த யாழ்ப்பாண
மண்ணின் மக்களின் பங்களிப்பு
ஆயுதரீதியான செயற்பாடுகளில்
வெறும் தலைமைகளுக்கு
மாரடிக்கும் கூட்டமாக இருக்க
ஏனைய வறிய மாவட்டங்களின்
மக்கள் போராளியாகியது ஆதிக்க
மேலாண்மையின் திணிப்பின்
எச்சங்களே.

இவ்விடுதலைக்கு மூன்று
இடங்களின் முக்கியத்துவம்
என்றுமே தவிர்க்கமுடியாததாகும்.
அவையாவன யாழ்ப்பாணம்,
கொழும்பு, புலம்பெயர் மண்.
அரசியல் செய்கின்றோம் என்ற
பாசாங்கில் யாழ்ப்பாணத்திலிருந்து
ஜனநாயக வழியில் மக்கள்
தேர்வு செய்த பிரதிநிதிகள்
சிங்கள அரசுகள் கொடுக்கும்
வாகனங்களில் யாழ்ப்பாணத்திற்கும்
கொழும்பிற்கும் இடையில்
ஓடித்திரிந்து பரபரப்பு என்று
பம்மாத்துக்காட்டி நேற்று
ஒருகதை இன்று ஒரு கதைபேசி
மக்களுக்கு மூளைக்குழப்பம்
ஏற்படுத்திவிட்டு அதே
யாழ்ப்பாண ஆதிக்கநாயகர்களின்
அறைகூவல்களை ஏற்று விமானம்
ஏறிப் புலம்பெயர் மண்ணிலும்
பொன்னாடைக்கு கழுத்துக் காட்டும்
இந்தப் பைத்தியக்கார வேட்டி
கட்டி நிற்பது ஏமாறுகின்றவர்கள்
இருக்கும்வரை ஏமாற்றலாம் என்ற
பழைய வேதாகமம்தான்.

இந்த விடுதலைப்
பயணத்தின் வீழ்ச்சிக்கு அரைவாசி
வீதம் புலம்பெயர் உறவுகளே
பொறுப்பேற்க வேண்டியவர்கள்.
ஜனநாயகச் சோலையாக
மலர்கள் மலர்ந்து மணம் வீசும்
இந்த நாடுகளில்கூட எங்கள்
விடுதலைக்கான செயற்பாடுகளை
அரசியல் நோக்கம் கருதிக்
கை இணைக்கவோ, அல்லது
கருத்துப் பரிமாற்றம் செய்யவோ
எந்த அமைப்பும் எதையும்
முன்னெடுக்கவில்லை. மாறாகப்
பணத்தை வசூலிப்பதில் காட்டிய
சிரத்தை சிலரது சிரத்தை
வெட்டி வீழ்த்துவதில் போய்
முடிந்தது. இந்த முரண்பாடானது
இடதுசாரியச் சிந்தனையாளர்களும்
வலதுசாரிச் சிந்தனையாளர்களும்
முட்டிக்கொள்வது என்பதும்
உண்மையை மறக்கடிக்கும்
உயர்சாதிப் பிதறல்களே.

உலக அரங்கிலே
எங்கள் விடுதலை உணர்வுபோல்
நாற்றுக்கணக்கான அபிமானிகள்
புலம்பெயர் நாடுகளின் தங்கள்
எண்ணங்களை எடுத்து
விளம்புகின்றனர். உலகத்திலுள்ள
நீதி நியாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைகளை, சங்கங்களைத்
தேடி தம் கொள்கைகளைப்
பறைசாற்றுகின்றனர். நடைமுறை
அரசியல் அறிவுகளைப் பெற்றுப்
பொது வேலைத்திட்டங்களை
முன்னெடுக்கின்றனர். ஆனால்
எங்கும் நடக்கும் எங்கள்
விழாக்கள் விடுதலை புனிதம்
என்றும் அதை நாம் வணங்கி
விசுவாசத்துடன் வழிபட
வேண்டும் என்று அதே
யாழ்ப்பாண வெள்ளைவேட்டிக்
கும்பல் மேடைகளிலே
விளாசித்தள்ளிவிட்டு எங்கே
தன்னைக் கௌரவிக்கிறார்களா?
எனச்சுற்றும் முற்றும் பார்க்கும்
இந்த மோசடிக்காரர்களால்
இன்று நிறைந்த அரசியல்
அறிவைப் படிக்கும் எம் தமிழ்ச்
செல்வங்களுக்கும் விடுதலை
என்பது வேண்டாத ஒன்றாய்
தெரிகின்றது.

இன்னும் முக்கியமானது நாம்
இங்கே வந்ததற்கான காரணம்
அகதித்தஞ்சமாக இருந்தாலும்
எங்கள் முழுமுதல் நோக்கம்
பொருளாதார நலன்களைப்
பேணுவதற்காகவே. எங்கள்
பிள்ளைகளுக்கு நல்ல கல்வி
கொடுக்கலாம் என்றுதான். ஆனால்
இவைகளில்தான் நாம் அமோக
வெற்றி பெற்றோம். ஆனால் பாடுபட
வேண்டிய முழுநேர வேலைக்குரிய
விடுதலையை பகுதிநேர
வேலையாகக் கொண்டோம்.
எனவே நாங்கள்கொண்ட
பொருளாதார நோக்கங்கள்
வெற்றிபெற்றன. அதுமட்டுமா

வெள்ளைக்காரன் அன்று
எங்கள் நாட்டை அதிகாரத்தால்
கட்டியாண்டான். ஆனால் இன்று
எங்கள் காசுகளால் அவன் நாட்டு
வீதிகளை விலைக்கு வாங்கி
விட்டோம். ஆக எந்த உலகம்
நீதிக்குரியது. என்பது இன்றுவரை
தெரியாது ஆனாலும் அமெரிக்கா
வந்து போர்புரிந்து எம்மைக்
காப்பாற்றும் என நம்புகின்றோம்.

தேச விடுதலைக்கு முன்பே
சமூகவிடுதலை என்ற
தேவையான சிந்தனை எம்மக்கள்
மனதார விரும்பியும் திட்டமிட்டு
மறுக்கப்பட்டது. அப்படி எடுத்து
ஆராயப்பட்டிருந்தால் இந்த
ஈழப்பிரமுகர்களே என்றும்
குற்றவாளிக்கூண்டில்
நிறுத்தப்பட்டிருப்பர். இந்தச்
சமூகத்தின் வேற்றுமைகளைச் சாதி
சமயப் பிரிவுகளை உண்டாக்கியவன்
நானே என்றும் இனிமேல்
நானே நினைத்தாலும் இந்த
வேற்றுமைகள் மாறமாட்டாது என்று
சொல்லும் கடவுள்களைக் கட்டிக்
காவிக்கொண்டு, கோவில்களைக்
கட்டிக்கொண்டு செல்வது
இலகு. நல்ல கொள்கைகள்
வாழ்வது என்றுமே எங்களிடம்
சாத்தியமில்லை. சாத்தியமாவதற்கு
சத்தியத்தை நம்பி ஒரு புரட்சி
வேண்டும்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 5 | 4 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 1 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 9 | 7 |
| 2 | 4 | 3 | 7 | 9 | 6 | 8 | 1 | 5 |
| 6 | 1 | 8 | 5 | 4 | 3 | 2 | 7 | 9 |
| 5 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 8 | 3 |
| 3 | 7 | 9 | 1 | 2 | 8 | 5 | 4 | 6 |
| 8 | 3 | 7 | 2 | 1 | 5 | 9 | 6 | 4 |
| 4 | 6 | 2 | 8 | 3 | 9 | 7 | 5 | 1 |
| 9 | 5 | 1 | 6 | 7 | 4 | 3 | 2 | 8 |

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ல் | வ | சே | த |
| வ | ளை | ஆ | த் |
| ழி | வி | மை | பு |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மா | வீ | ர | ர் | த | த் | பு |
| வீ | த | வை | வ | ர | வு | ப் |
| ட் | எ | ள் | ளு | வ | ன் | னீ |
| ட | ண் | ர் | ள் | லா | ல் | இ |
| பு | ணை | தா | வ | வீ | ப | யு |
| ர | ம் | த் | று | ல் | ட் | தி |
| ம் | க | ந | தி | க | டு | க |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரதமும் பரமனும்.... (தொடர்ச்சி)

### தாண்டவம்....

திருமதி சாந்தினி துரையரங்கன்
ஜேர்மனி

தாண்டவம் வீரத்துடனும் விறுவிறுப்புடனும் ஆடப்படும் ஆடல் வகையாகும் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் முன்னிலையில் தவம் செய்து கொண்டிருக்கும் முனிவரால் வகைப்படுத்தப்பட்ட இறைவனின் நடனமே தாண்டவம். சிவன் ஆடிய 108 வகை தாண்டவங்கள் உள்ளன. பல்வேறுபட்ட சந்தர்பங்களில் இறைவன் இத் தாண்டவங்களை ஆடியுள்ளார். தலபுஸ்பபுடம் தொடக்கம் கங்காவதரணம் வரையாக அவை பெயரிடப்பட்டுள்ளன. இவற்றை சிவன், பார்வதி, திருமால், முருகன் போன்றவர்களுடன் சேர்ந்தும் ஆடியதாக கூறப்படுகின்றது. சிவன் தனித்து ஆடியவை - 48 என்றும், பார்வதி தேவியுடன் சேர்ந்து ஆடியவை 36 என்றும், திருமாலுடன் ஆடியவை - 9 என்றும், முருகனுடன் ஆடியவை - 3 என்றும், தேவர்களுக்காக ஆடியவை 12 என்றும் அவை வகைப்படுத்தப்படுகின்றன.

தாண்டவத்தை சிவபெருமானே உருவாக்கி தண்டுவுக்கும், பரதருக்கும் கற்பித்தார் என்றும், நாடோறும் சந்தியாவந்தன வேளையில் (மாலை) ஆடுவார் என பரதசாஸ்திரத்தின் நான்காவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. தாண்டவத்தை கரணங்கள் எனவும் கூறுவர். கரணம் என்பதற்கு பல விளக்கங்கள் உள்ளன. நடனத்தில் கை, கால்களின் அசைவுகளின் சேர்க்கையே கரணமாகும் எனப் பரதர் வரைவிலக்கணம் கூறியுள்ளார்.

108 தாண்டவ வடிவங்களை சிவன் தொடர்பான சில நடன உருப்படிகளில் பயன்படுத்தப்படுகின்றன. சிவன் ஆலயங்களில் சிற்ப, ஓவியங்களில் தாண்டவ வடிவங்கள் அமைப்புக்களை சிறப்பாக காணலாம்.

தாண்டவங்களில் 64, பின்னர் 12 தாண்டவங்கள் சிறப்பு பொருந்தியவை என்றும் அது குறுகி அவற்றுள் 7 தாண்டவங்கள் (ஸப்த தாண்டவங்கள்) மேலும் சிறப்பு பெற்றவை என்றும் கூறப்படுகின்றது. ஸப்த தாண்டவங்கள் ஐந்தொழில் தத்துவத்துடன் தொடர்புடையவை. இவற்றுள் ஆனந்த தாண்டம் என்னும் நடராஜ வடிவம் தனித்துவமான சிறப்பு வாய்ந்ததாகவும் போற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...

## 11வது, 14வது, 16வது, 18வது, 19வது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா-ஜெயராம்



இறுதிப் பதவியில் 23 மே 2015 - 5 டிசம்பர் 2016

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்

பதவியில் 1984 - 5 டிசம்பர் 2016

இளமைப் பெயர் - கோமளவல்லி (ஜெயலலிதா)

பிறப்பு - பெப்ரவரி 24, 1948 மேல்கோட்டை, மைசூர், இந்தியா

இறப்பு டிசம்பர் 05, 2016 (அகவை 68) சென்னை, தமிழ்நாடு, இந்தியா

## வாழ்க்கைக் குறிப்பு

மைசூர் சமஸ்தானம் (தற்போது கர்நாடகா) மாண்டியா மாவட்டத்தில் பாண்டவபுரா தாலுகாவில், மேல்கோட்டை ஊரில் வாழ்ந்த ஜெயராம் - வேதவல்லி இணையரின் மகளாகப் பிறந்தார் பெங்களூரில் இருந்தபோது ஜெயலலிதா பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலை பள்ளியில் படித்தார். சென்னைக்கு வந்த பின்னர், 1958-ஆம் ஆண்டு முதல் 1964ஆம் ஆண்டு வரை சர்ச் பார்க் ப்ரேசெண்டேஷன் கான்வென்ட்டில் படித்து மெட்ரிக் தேறினார். ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் புகுமுக வகுப்பில் படிக்க அனுமதி கிடைத்த நேரத்தில் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. எனவே படிப்பை கைவிட்டு நடிகையானார். சிறீதர் இயக்கிய வெண்ணிற ஆடை என்கிற படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரையுலகப் பங்களிப்பு

ஜெயலலிதா 127 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். அவற்றுள் எம்.ஜி.ஆருடன் 28 படங்களில் இணைந்து நடித்தார். மேலும் சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், ஜெய்சங்கர், முத்துராமன், ரவிசந்திரன், சிவகுமார், ஏ. வி. எம். ராஜன், என். டி. ராமராவ், நாகேஸ்வரராவ், தர்மேந்திரா போன்ற பல முன்னணி நடிகர்களுடன் சேர்ந்து நடித்துள்ளார்.

## அரசியல் பங்களிப்பு

1981ல் அ. தி. மு. க. வில் இணைந்து, அக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஆனார். அதன் பிறகு 1984ஆம் ஆண்டு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரானார். எம். ஜி. இராமச்சந்திரனின் மறைவுக்குப் பிறகு, இரண்டு ஆண்டுகள் கழித்து 1989 ஆவது ஆண்டில் அ. தி. மு. கவின் தலைமைப் பொறுப்பேற்று அதன் பொதுச்செயலாளர் ஆனார் 1984 முதல் 1989 வரை தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னாள் முதல்வர் ம. கோ. இராமச்சந்திரனின் இறப்புக்குப் பின்னர் அவரது அரசியல் வாரிசாக ஜெயலலிதா தன்னை அறிவித்துக் கொண்டார். ஜானகி இராமச்சந்திரனுக்குப் பின்னர் தமிழ்நாட்டின் இரண்டாவது பெண் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் முதல்வராக இருந்த 1991-96 பதவிக் காலத்தில் வருமானத்துக்கு மீறிய அளவில் சொத்து சேர்த்தார் என்ற வழக்கில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம், 2014 செப்டம்பர் 27 இல் ஜெயலலிதா குற்றவாளி என்று தீர்ப்பளித்தது. பதவியில் இருக்கும் போதே பதவியில் இருந்து அகற்றப்பட்ட முதலாவது இந்திய மாநில முதல்வர் ஜெயலலிதா ஆவார். 2015 மே 11 அன்று சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் விடுவித்து கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி. ஆர். குமாரசாமி தீர்ப்பு வழங்கினார். இதனைத் தொடர்ந்து 5-வது முறையாக ஜெயலலிதா மீண்டும் தமிழகத்தின் முதல்வராக பதவி ஏற்றார்.

## தமிழக முதல்வர்

ஜெயலலிதா தமிழக முதல்வராக கீழ்காணும் காலங்களில் பணியாற்றியிருக்கிறார்.

-ஜூன் 24, 1991 - மே 11, 1996 தமிழகத்தின் 11வது முதல்வர்

-மே 14, 2001 - செப்டம்பர் 21, 2001தேர்தலில் போட்டியிடாமல் முதல்வராக பதவி வகித்தார் இப்பதவி முடக்கப்பட்டது

-மார்ச் 2, 2002 - மே 12, 2006 2001 தமிழகத்தின் 14வது முதல்வர்

-மே 16, 2011 - செப்டம்பர் 27, 2014 தமிழகத்தின் 16வது முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மே 23, 2015 - மே 22, 2016 தமிழகத்தின் 18வது முதல்வர்

-மே 23, 2016 - டிசம்பர் 5, 2016 தமிழகத்தின் 19வது முதல்வர்

## சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர்

ஜெயலலிதா தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். 1989 முதல் 1991வரை.

## சட்டமன்ற உறுப்பினர்

| ஆண்டு | நிலைமை | இடம் |
|---|---|---|
| 1989 | வெற்றி | போடிநாயக்கனூர் |
| 1991 | வெற்றி | பர்கூர், காங்கேயம் |
| 1996 | தோல்வி | பர்கூர் |
| 2002 | வெற்றி | ஆண்டிப்பட்டி |
| 2006 | வெற்றி | ஆண்டிப்பட்டி |
| 2011 | வெற்றி | ஸ்ரீரங்கம் |
| 2015 | வெற்றி | டாக்டர்.ராதாகிருஷ்ணன் நகர் |
| 2016 | வெற்றி | டாக்டர்.ராதாகிருஷ்ணன் நகர் |

## ஜெயலலிதா தலைமையில் அதிமுகவின் சாதனைகள்

1991 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலில் 168 இடங்களில் போட்டியிட்டு 164 இடங்களில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சியில் அமர்ந்தது. 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் 18 இடங்களில் வெற்றிபெற்று வாஜ்பாய் தலைமையில் அமைந்த மத்திய அரசில் அதிமுக அங்கம் வகித்தது.2001 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலில் 132 இடங்களில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சியில் அமர்ந்தது. 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலில் 150 இடங்களில் வெற்றிபெற்று ஜெயலலிதா முதல்வராக பதவியேற்றார். 2011 ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், தமிழகத்தில் அப்போது இருந்த 10 (இப்போது 12) மாநகராட்சிகளிலும் வெற்றிபெற்றது. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள 40 தொகுதிகளிலும் ஜெயலலிதாவின் தலைமையில் தனித்துப் போட்டியிட்ட அதிமுக, 37இல் வென்று வரலாற்றுச் சாதனை புரிந்தது. மேலும் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற பெருமையையும் பெற்றது.2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலில் அதிமுக தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில் 227இல் நேரடியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 இல் அதிமுக கூட்டணியில் இருந்த மற்ற கட்சிகள் அதிமுகவின் இரட்டை இல்லை சின்னத்திலும் போட்டியிட்டு 134 தொகுதிகளில் வென்று ஆட்சியைத் தக்கவைத்தது. 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆளுங்கட்சி மீண்டும் ஆட்சியைத் தக்கவைத்தது 2016இல் தான். 2016 ஜூன் மாதம் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் 4 உறுப்பினர்களை அனுப்பியதன் மூலம், நாடாளுமன்றத்தில் அதிமுகவின் பலம் 50 (37 மக்களவை 13 மாநிலங்களவை) ஆக உயர்ந்தது. இது தமிழ்நாட்டில் எந்த ஒரு கட்சியும் செய்யாத சாதனை.2011 சட்டமன்ற தேர்தல், 2011 உள்ளாட்சித் தேர்தல், 2014 நாடாளுமன்றத் தேர்தல், 2016 சட்டமன்றத் தேர்தல் என தொடர்ச்சியாக 4 தேர்தல்களில் பெரும்பாலும் தனித்து நின்று ஜெயலலிதா தலைமையில் அதிமுக வெற்றிவாகை சூடியது.

## மறைவு

ஜெயலலிதா, 5 டிசம்பர் 2016 அன்று இரவு 11.30 மணிக்கு சென்னையிலுள்ள அப்போலோ மருத்துவமனையில் காலமானார். 75 நாட்களுக்குப் பிறகு உடல்நலம் மிகவும் மோசமாகி உயிரிழந்தார்.போயஸ் கார்டனுக்கு ஜெயலலிதாவின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன. அதன் பிறகு ராஜாஜி அரங்கத்திற்கு அவரின் உடல் எடுத்துச் செல்லப்பட்டு, பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது இந்திய சனாதிபதி பிரணப் முகர்ஜியின் இறுதி அஞ்சலிக்குப்பின் முப்படையிடம் ஒப்படைக்கப்பட்டு 6.12.2016 மாலை 6.10 மணிக்கு ஆளுனரின் மரியாதைக்குப் பின்னர் எம்ஜிஆர் நினைவிடத்திற்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதா இறந்த செய்தி கேட்ட அதிர்ச்சியில் அ.தி.மு.கவின் தொண்டர்கள் ஆண்கள், பெண்கள் என 80 பேர் உயிரிழந்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவித்தன. 50 வயதிற்கும் மேற்பட்டோரே உயிரிழந்தவர்களுள் பெரும்பாலானோர் என்றும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது. முதல்வர் ஜெயலலிதாவின் உழைப்பு முயற்சி திறமை ஆளுமையின் வெளிப்பாடாக அவரைப் புரட்சித் தலைவி, தங்கத்தாரகை, தங்கமங்கை, அம்மா, இரும்புப்பெண், முதலமைச்சர், நடனதாரகை, நடிகை, பின்னணிப்பாடகிபல்மொழிவித்தகர், எழுத்தாளர், அரசியல்வாதி, சாணக்கியர், பேச்சாளர், கடமை வீராங்கனை, இந்தியாவின் ஒப்பற்ற செல்வி என்று எந்நாளும் போற்றப்படும் முதல்வராகி மறைந்துவிட்டார். கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு வழியில் வாழ்ந்துகாட்டிய இந்த அற்புத பெண்மணிக்கு எங்கள் இதய அஞ்சலிகள்!....

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடம் தாண்டவம் தொழில்...

திருநெல்வேலி தாமிரசபை முனிதாண்டவம்-காளிகா தாண்டவம் படைத்தல்
மதுரை (வெள்ளியம்பலம்)ரஜிதசபை சந்தியா தாண்டவம் இன்பம் காத்தல்
பாண்டிநாட்டு திருப்புத்தூர் சிற்சபை கௌரீ தாண்டவம் துன்பம் காத்தல்
இருண்ட நள்ளிரவில் சுடலையில் சங்கார தாண்டவம் அழித்தல்
திருக்குற்றாலம் - சித்திரசபை திரிபுர தாண்டவம் மறைத்தல்
திருவாலங்காட்டு இரத்தினசபை ஊத்துவ தாண்டவம் அருளல்
சிதம்பரம் (பொன்னம்பலம்)கனகசபை ஆனந்த தாண்டவம் 5 தொழில்

---

## இலங்கை தேசிய இலக்கிய விருதுகள் - 2016

தமிழ் இலக்கியம்
சாஹித்யரத்னா விருது - பேராயர் சுப்பிரமணியம் ஜெபநேசன்
நாவல் - ''யாழிசை" - சிவ ஆரூரன்
சிறுகதை - "பாவுதளிர் தாவு வானம்" பசுந்திராசசி
கவிதை - "கடல் கடந்த நாட்கள்" கலையார்வன்
சிறுவர் இலக்கியம் - "வண்ண வண்ணப் பூக்கள்" செஷல்லிதாசன்
இளைஞர் இலக்கியம் - "நல்லதோர் வீணை" எஸ். அருளானந்தம்
நாடகம் - "கிணற்றங்கரை" ஹ்ரீலேகா பி. குமார்.
மொழிபெயர்ப்பு நாவல் - "அசையாத மலைத் தொடர்"
திக்குவல்லை கமால்
மொழிபெயர்ப்பு சிறுகதை - "பட்டாம் பூச்சிக் கனவுகள்" அசஷ்ரஃப்
சிஹாப்தீன்.
மொழிபெயர்ப்பு கவிதை - "கறுப்பு ரோசாக்கள்" வைரமுத்து சுந்தரேசன்
ஆய்வு - "தேயிலையின் செழுமையும்" தொழிலாளரின் ஏழ்மையும்.
பேராசிரியர் மு. சின்னத்தம்பி.
ஆய்வு மொழிபெயர்ப்பு - "அநாமதேயங்களாக இறந்தோர்
அறியப்பட்டவர்களானமை" க. சண்முகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைத்தொட்ட ஒரு தாயின் நினைவு...

(சிறுகதை)

திருமதி கலைவாணி ஏகானந்தராசா-ஜேர்மனி

எனக்கு பத்து வயது இருக்கும்போது எங்கள் பக்கத்து வீட்டிற்கு ஒர் குடும்பம் குடிவந்தார்கள். அவர்களுக்கு 12 வயதில் ஒர் ஆண் பிள்ளையும் என் வயதில் ஒரு பெண் பிள்ளையும் இருந்தனர். . ஆண் பிள்ளை தரன் மிக சுறுசுறுப்பானவன். அவன் தங்கை தேவி அவனைவிட அழகும் விவேகமும் உள்ளவளாக காணப்பட்டாள். விரைவிலே நாம் நல்ல நண்பர்களானோம். நாம் மூவரும் சேர்ந்தே பாடசாலைக்குப் போய் வருவது வழக்கமாகிவிட்டது.

என் குடும்பம் ஓரளவு வசதியானது. அளவான ஓர் கல்வீடு. என் தந்தை அரசாங்கவேலை பார்த்ததால் அவரின் பாவனைக்காக ஒரு மோட்டார் வாகனமும் வைத்திருந்தார். அனேகமாக என் தந்தை வேலைக்குச் செல்லும்போது என்னையும் தேவியையும் பாடசாலையில் இறக்கிவிட்டுச் செல்லுவார். அம்மா குடும்பப் பெண்ணாக இருந்தபோதும் மா இடித்தல் மிளகாய்த்தூள் வறுத்தல் போன்ற வேலைகளை செய்வதற்கு கூலி கொடுத்து வேலையாட்களை அமர்த்துவதுண்டு.

பக்கத்து வீட்டிற்கு தேவியின் குடும்பம் வந்ததிலிருந்து தேவியின் அம்மாவே இந்த வேலைகளை செய்வதற்காக அமர்த்தப்பட்டார். நான் சிறு பிள்ளையாக இருந்தாலும் எனக்கு என் அம்மாவின் மீது கோபமே ஏற்பட்டது. அதற்கு காரணம் தேவியின் அம்மா மீது ஏற்பட்ட கருணையே. தேவியின் அம்மா பெயர் விசாலாட்சி. என் அம்மா அவரை தேவியம்மா என்றே அழைப்பார். அயலவர்களும் அப்படியே அழைப்பர். ஆனால் அவர் இல்லாத சமயங்களில் குருட்டு விசாலாட்சி என்றே குறிப்பிடுவர். தேவி அம்மா மிக அன்பானவர். ஏழ்மையிலும் ஓர் அமைதியான அழகு அவரிடமிருந்தது. அந்த அழகுக்கு கண்ணூறு பட்டது போல் அவரின் முகத்தில் ஒரு கண் பார்வை மட்டுமே இருந்தது. அதிகாலையில் குளித்து முழகி நீளத் தலைமுடியை அரைவாசியாக முடிந்து, நெற்றியில் மூன்று திருநீற்றுக் குறியிடையே பெரிய பொட்டும் வைத்திருப்பார். அழகிய குடும்பப் பெண்ணாய் பார்பவர்கள் மனதில் பக்தியை ஏற்படுத்தும் அழகு.

தேவியின் தந்தை நடராசா. அவர் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளி. அவரை வெளியே பார்த்தவர்கள் குறைவு. தேவியின் வீடு கிடுகினால் வேயப்பட்டு, சாணத்தால் மெழுகப்பட்ட சிறிய மண் வீடு. நானும் தேவியும் அவர்கள் முற்றத்தில் எட்டுக்கோடு, கெந்திப்பிடித்தல்,மாங்கொட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிதல் போன்ற விளையாட்டுகள் விளையாடுவோம். அப்போதெல்லாம் தேவியின் அப்பாவை பார்த்திருக்கிறேன். அவர்களது சிறிய வீட்டின் முன்பகுதியில் ஓர் ஓரமாக போடப்பட்ட சாய்வு நாற்காலியில் படுத்திருப்பார். மிக தூய்மையாக நாலுமுழ வேட்டி கட்டி திருநீற்று குறியுடன்இருப்பார் அன்பாக நலம் விசாரிப்பார். இடை இடை எணே எணே என தன் மனைவியை கூப்பிடுவார். தேவியம்மாவும் கையில் பார்த்த வேலையை விட்டுவிட்டு ஓடிவந்து அவரை தூக்கி நிமிர்த்தி தேநீர் பருக்கி வாயைத்துடைத்து மீண்டும் அவரை திருப்பி வசதியாக படுக்க வைத்து விட்டுச் செல்வார். தேவியின்அம்மாவின் முகத்தில் கோபத்தையோ. வாயில் முணுமுணுப்பையோநான் ஒருபோதும் கேட்டதுமில்லை பார்த்ததுமில்லை. அவர்கள் குடும்பம் வருமானம் காணாது மிக கஸ்டப்படுவதை உணர்ந்து அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அவர்கள் வீட்டில் மிகுதியான உணவுகளையும் பொருட்களையும் கொடுப்பதுண்டு. என் தந்தை எனக்கும் என் அண்ணனுக்கும் புத்தகம் பென்சில் பேனா வேண்டும்போது தேவிக்கும் தரனுக்கும் சேர்த்தே வேண்டிக்கொடுப்பார். பாடசாலைக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தையும் செலுத்திவிடுவார்.

தேவியின் அண்ணா தரன் படிப்பில் மிக கெட்டிக்காறன். அவன் பன்னிரண்டாம் வகுப்பிற்கு வந்தபோது தான் அவர்கள் வீட்டில் பொருளாதார சிக்கல் அவர்களை வாட்டத் தொடங்கியது. தந்தையின் நோய் அதிகமாகி அவரது வைத்திய செலவிற்காய் தேவியம்மா கடன்படாத வீடே இல்லை எனும் நிலமையில் இறுதியாக தந்தையும் மரணமடைந்தார். தந்தை இருந்தபோது அவரால் அக்குடும்பத்துக்கு வருமானம் இல்லாத போதும் கலகலப்பாகப் பேசி மகிழ்திருந்த வீடு வெறித்துப் போனது. தேவியம்மா முகத்தில் பொட்டு மட்டுமல்ல அழகும் முக செந்தளிப்பும் கூட விடைபெற்றிருந்தது.

இதுவரை கணவனுக்காக அற்பணித்த தன் சுகங்களை மகனுக்காக தொடர்ந்தார்.. தரன் கல்வி தடைப்படக்கூடாது என்று வீடு வீடாக சென்று நாள் முழுவதும் கஸ்டப்பட்டு வேலை செய்தார். விறகு வெட்டுவதிலிருந்து இடியப்பம் அவித்து விற்பது நோயாளிகளை பராமரிப்பது என்று குடும்பச் சுமையைத் தாங்கமுடியாமல் தாங்கினார்..ஓய்வு கிடைப்பது என்பது அவருக்கு குதிரைக் கொம்புதான். நான் பத்தாம் வகுப்பிற்கு வந்தபோது எனக்கு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது. எனக்கு புரியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப்பாடங்களை
சொல்லித்தரும் தேவியை அவர்
தாயார் பாடசாலையிலிருந்து
நிறுத்திவிட்டார். காரணம்
வறுமை மட்டுமல்ல. ஆட்சேர்ப்பு
என்ற பெயரில் பிள்ளைபிடிகாரர்
தொல்லையும் காரணமானது.
பல்கலைக்கழகத்தில்
படித்துக்கொண்டிருக்கும் தரனை
எப்படியாவது படிப்பித்துவிட்டால்
தான் இதுவரை பட்ட
கஸ்டங்கள் துன்பங்கள்
பனிபோல் கரைந்துவிடும்
என்று மனக்கோட்டை கட்டினார்
தேவியம்மா.

அன்று ஒரு மாலைப்பொழுது.
பயங்கரமானகுண்டு வெடிப்பும்
தொடர்ந்த துப்பாக்கிவெடிச் சத்தமும்
எம்மையெல்லாம் நிலைகுலைய
வைத்தது. வீடுவீடாக சோதனைகள்
என்ற பெயரில் பலர் காணாமல்
போயினர். இரவு எப்படியோ
கழிந்தது. அடுத்தநாளும் எங்களின்
அயலிலேயே சுற்றிவளைப்பும்
தேடலும் நடைபெற்றது. காரணம்
குண்டுவைத்த போராளி ஒருவன்
எமது வீட்டுப் பக்கமாக வந்ததாக
யாரோ எட்டப்பன் எத்திவைத்ததே.
..ஊரடங்கு நேரம் விடைபெற்ற பின்
தேவியம்மா வீட்டிற்கு ஒரு வாகனம்
வந்து யாரையோ ஏற்றிச்சென்றதை
நாம்அவதானித்தோம்.
அன்றிலிருந்து தேவியம்மாவை
காண்பது அரிதாகிவிட்டது.

அதிகாலை இருட்டில் யார் யாரோ
வாகனத்தில் கூட்டிவருவார்கள்
இரவில் வந்து ஏற்றிச்
செல்வார்கள். அக்கம் பக்கத்தவரோ
விடுப்பும் விசாரணையுமாக
ஈடுபட்டிருந்தனர்.

ஊரெங்கும் தேவியம்மாவைப்பற்றியே
பேச்சு. இப்போதெல்லாம்
வீட்டுவேலைக்கு அவ வராதமைக்கு
காரணம் இரவில் தப்பான வழியில்
சம்பாதிக்கின்றார் என்று ஒருவர்
காதில் ஒருவராக செய்தியை பரப்ப
அப்படியே எம் இனம் அதற்குக்
கண் காது மூக்கு எல்லாம்
வைத்து மகளையும் தன்னுடன்
கூட்டிசென்று சம்பாதிக்கின்றார்
என்றும் அவரைக்காய் போட்டால்
சுரைக்காயா முளைக்கும்
என்றெல்லாம் தம் இஸ்டப்படி
பேசினர்.

தரன் கண்டியில் படிக்கிறான்
என்பதுமட்டும் உறுதியாகிற்று. ஒரு
விடுமுறைக்கு ஊர் வந்தவனிடம்
ஊர் மக்கள் கண்ணாலே பார்த்தது
போல இல்லாதது பொல்லாதது
எல்லாம் சொல்லிவிட அன்று
தேவி வீட்டில் பூகம்பமே வெடித்தது.
குருட்டு விசாலாட்ஷி என்ற பெயரை
மாற்றி இராக்கன்னி விசாலாட்சி
என்று பட்டம் சூட்டப்பட்டதை
அறிந்த விசாலாட்சியின் இதயம்
ஆயிரம் தடவை உடைந்து சுக்கு
நூறாகியது. மகனிடம் தன் பக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிய வார்தைகள் மட்டும்
எங்களுக்கு தெளிவாய் கேட்டது.
"சீ இந்த கேடு கெட்ட பிழைப்பை
நடத்தியா என்னை படிப்பித்தாய்?
எனக்கு இந்த படிப்பே வேண்டாம்...
இனிமேல் இந்த வீட்டிற்கு நான்
வரவே மாட்டேன்.. "குருடியும்,
மகளும் எதையாவது செய்யுங்கள்"
என்று கூறிவிட்டு கோபத்துடன்
சென்றான். ஊர் உலகமெல்லாம்
தன்னை குருடி என குறிப்பிடுவதை
தேவியம்மா அறிந்திருந்தாலும்
தன் மகன் வாயிலிருந்து வந்த
அந்த வார்த்தைகளைக் கேட்டு
தேவியம்மா இடிந்தே போனார்.
அவர் காதுகளில் அவன் கூறிய
வார்த்தைகள் எதிரொலித்துக்
கொண்டே இருந்தது. உடலெங்கும்
ஆயிரம் ஊசிகளால் குத்துவது
போன்ற வேதனையில் துடித்தார்.
அவரால் உண்ணவோ உறங்கவோ
முடியாமல் துவண்டு போனார்.
சில மாதங்கள் கழிந்தன. திடீரென
ஒருநாள் எங்கள் வட்டாரம்
சுற்றிவளைக்கப்பட்டது. மீண்டும்
தேடுதல் மீண்டும் பலர் காணாமல்
போயினர். சில வீடுகளில்
பெண்கள் சூறையாடப்பட்டனர்.
அடுத்தநாள் தேவியின் நிலமையை
பார்த்து நான் மட்டுமின்றி
எங்கள் வீட்டில் எல்லோருமே
அதிர்ச்சியில் விறைத்திருந்தோம்.
தேவியம்மாவின் புலம்பலும்
..அழுகையும் கேட்டவண்ணம்
இருந்தது. மின்சாரக் கம்பியில்
மாட்டிய வௌவாலைப்போல்
துடித்தார். மூன்று நாட்கள்
கழிந்தன. அக்கம் பக்கம்
எல்லாம் உண்டு களித்திருக்க
தன்னை மெழுகாய் உருக்கிய
தேவியம்மாவை தேற்றவோ உணவு
தண்ணீர் கொடுக்கவோ யாரும்
முன்வரவில்லை. திடீரென ஒருநாள்
இரு வாகனங்கள் தேவியம்மா
வீட்டு வாசலில் வந்து நின்றன.
அதிலிருந்து சில இளைஞர்களும்
இரண்டு பெண்களும் இறங்கி
தேவியம்மாவை கைத்தாங்கலாக
வாகனத்தில் ஏற்றினர். அடம்பிடித்த
தேவியையும் மிகுந்த கஸ்டத்தின்
மத்தியில் தூக்கிவந்து வாகனத்தில்
ஏற்றிச்சென்றனர்.

அடுத்த நாள் நான் பாடசாலைக்கு
செல்லாது மன நோயாளர்
வைத்தியசாலைக்குச் சென்றேன்.
அங்கு நான் கண்ட காட்சி என்
இதயத்தை கசக்கிப் பிளிந்தது.
"என்னை விடுங்கோ என்னை
ஒண்டும் செய்யாதேங்கோ
பிளீஸ் பிளீஸ்" என்று தேவி
கையை காலை அடித்து
கூச்சல் போட்டவண்ணம்
இருந்தாள். தேவியை கட்டிலுடன்
கட்டிப்போட்டிருந்தனர். எனக்கோ
நெஞ்சு வெடித்துவிடும் போல்
இருந்தது. தேவியின் அம்மா
என்னை கண்டதும் ஓ..வென்று
அழத்தொடங்கிவிட்டார். 'தேவியின்
நிலமையை பாரம்மா நாங்கள்
யாருக்கு என்ன பாவம் செய்தோம்?
ஒன்றுமறியாத இந்தப் பூவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வேன்? நாங்கள் இருவரும் சாவதை தவிர வேற வழி எனக்குத் தெரியேலம்மா.. என்று பெற்ற வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதார். அவரை எப்படி சமாதானப்படுத்துவதென்று புரியாமல் அவரை அணைத்தபடி நானும் அழுதேன். அப்பொழுது அங்கு நின்ற சில யுவதிகள் என்னை வெளியே அழைத்துச் சென்றனர்.

அதில் ஒருத்தி "அக்கா தேவியின் அம்மாவும் தேவியும் எங்களுக்கு தெய்வங்கள்" என்னையும் என்னைபோல பலபோராளிப் பெண்களையும் தங்கள் குடும்பத்தில் ஒருவரை கவனிப்பது போல எம்மையெல்லாம் வைத்தியசாலையில் இரவிரவாக கண்விழித்து பார்த்து, நடமாடவைத்த தெய்வங்கள். . அவளை வேண்டாதவர்கள் யாரோ அவள் ஒரு போராளி என்று போட்டுக் கொடுத்துள்ளனர். அதனால் தான் அவளை இந்த சித்திரவதை செய்திருக்கிறாங்கள். அவங்களை நாங்கள் சும்மா விடமாட்டம்" என்று கழத்து நரம்புகள் புடைக்க இரு கைகளையும் முட்டியாக்கி ஆவேஷ த்தை அடக்கிக்கொண்டாள். அதனை கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அப்படியானால்? பொது சேவையில் ஈடுபட்டிருக்கும் தேவியை பற்றியும் அரிய அற்பணிப்பில் ஈடுபட்ட தேவியம்மாவையும் பற்றியா எமது ஊரார் இவ்வளவு கேவலமாக கதைத்தனர்? அந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு துரோகம் செய்து விட்டோம். என் மனம் எம்மினத்தின் சார்பில் கூனிக்குறுகி நின்றது.

சிலமணி நேரத்தில் தரன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் "அம்மாவின் கண்ணைப்பிடுங்கிய துரோகி துரோகி உன்னை சும்மா விடமாட்டேன் ..எனக்கு கிட்ட வாறவனை சுட்டுடுவன்." என்றெல்லாம் தேவி சத்தமிட்டாள். தரனுக்கு எதுவும் புரியாது திகைத்து நின்றான். நான் தரனை அழைத்துச் சென்று எத்தனையோ வருடங்களுக்கு முன் தேவி என்னிடம் கூறிய கதையை அப்போது கூறினேன். தேவி இதனை யாரிடமும் கூறக்கூடாதென்று என்னிடம் சத்தியமும் வாங்கியிருந்தாள். அதாவது தரன் சிறுவயதில் தடியை வைத்து விளையாடும் போது தவறுதலாக தடி தாயின் கண்ணில் பட்டதாலேயே அவன் தாய்க்கு ஒரு கண் பார்வை பறி போனது என்கிற உண்மையை கூறினேன். அவன் தலையிலடித்துக்கொண்டு குழற ஆரம்பித்தான். "ஐயோ நான் ஒரு பாவி நானே கண்ணை குருடாக்கிவிட்டு குருடி என்று பழித்தேனே"..பாவி நான் பாவி' என்று அழுதான் ..அவனை அங்கிருந்தவர்கள் சமாதானப்படுத்தினார்கள். தாயைக் கட்டி அணைத்து மன்னிப்பு வேண்டி அழுததும் அந்த அன்பே உருவான தாய் அவனைத் தடவித் தேற்றியதும் இன்றும் என் கண்முன்னே காட்சியாய் விரிகிறது.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்.

ஐரோப்பாவில் இதுவரை விளையாடிய, விளையாடிக்கொண்டிருக்கும் உதைபந்தாட்ட வீரர்களில் மிகஅதிக பெறுமதியுடைய முன்னணி வீரர்கள் பத்துப்பேர்...


| பெயர் | கழகத்தின் பெயர் | ஆண்டு | வருடாந்தச் சம்பளம் |
|---|---|---|---|
| 1. Paul Pogba | Man.United | - 2016 | 120 மில்லியன் Euro |
| 2. Gareth Bale | Real Madrid | - 2013 | 101 |
| 3. Cristiano Ronaldo | RealMadrid | - 2009 | 94 |
| 4. Gonzalo Higuain | Juventus | - 2016 | 90 |
| 5. Neymar | FCBarcelone | - 2013 | 82.2 |
| 6. Luis Suarez | FCBarcelone | - 2014 | 81.72 |
| 7 Kevin De Bruyne | Man.City | - 2015 | 80 |
| 8. Angel Di Maria | Man.United | - 2014 | 75 |
| 9. Jemes Rodriguez | Real Madrid | - 2014 | 75 |
| 10. Zinedine Zidane | Real Madrid | - 2001 | 73.5 |

ஐரோப்பாவின் உதைபந்தாட்டக் கழகங்களில் வருடாந்தம் அதிகூடிய வருமானம் பெறும் கழகங்களின் 2015 ஆண்டின் தரவரிசை...

| கழகத்தின் பெயர் - | வருடாந்த வருமானம். | | |
|---|---|---|---|
| 1. Real Madrid | 577.0 | மில்லியன் | யூரோ |
| 2. FC Barcelone | 560.8 | " | " |
| 3. Man.United | 519.5 | " | " |
| 4. Paris St.Germain | 480.8 | " | " |
| 5. FC Bayern | 474.0 | " | " |
| 6. Man . City | 463.5 | " | " |
| 7. Arsenal | 435.5 | " | " |
| 8. Chelsea | 420.0 | " | " |
| 9. Leverpool | 391.8 | " | " |
| 10. Juventus Turin | 323.9 | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 60 வருடங்கள், 17 மொழிகள். 48,000 பாடல்கள், 4 தேசிய விருதுகள், எஸ்.ஜானகி எனும் அதிசயம்!

இயற் பெயர் சிஷ்டலா ஸ்ரீராமமூர்த்தி ஜானகிஇசை வடிவங்கள் பின்னணிப் பாடகி தொழில்(கள்) பாடகி, இசையமைப்பாளர் இசைத்துறையில் 1957-இன்று வரை. எஸ். ஜானகி (பிறப்பு: ஏப்ரல் 23, 1938) இந்தியாவின் புகழ் பெற்ற திரைப்படப் பாடகி. இவர் 17 மொழிகளில் சுமார் 48.000 பாடல்களைப் பாடியவர். பல பாடல்களைத் தாமே எழுதி, இசையமைத்துப் பாடியுள்ளார். நான்கு முறை தேசிய விருது பெற்றவர்.

### வாழ்க்கைக் குறிப்பு

ஜானகி தெலுங்கு பிராமணக்குடும்பத்தில் பிறந்தவர். ஆந்திராவின் குண்டூர் மாவட்டத்தில் பள்ளபட்லா என்ற ஊரில் ராமமூர்த்தி - சத்தியவதி தம்பதிகளுக்கு பிறந்தார். சிறு வயதிலேயே பாடத்தொடங்கி விட்டார். நாதசுர மேதை பைடிசாமி என்பவரிடம் முறையாக இசைப் பயிற்சியைப் பெற்றார். சென்னைக்கு இடம்பெயர்ந்த ஜானகி ஏவிஎம் ஸ்டூடியோவில் இணைந்து திரைப்படத்துறையில் நுழைந்தார். 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த விதியின் விளையாட்டு என்ற படத்தில் இடம்பெற்ற "பெண் என் ஆசை பாழானது ஏனோ" என்ற பாடல் இவரது முதல் பாடல் ஆகும். அடுத்த நாளே அவருக்கு தெலுங்குப் படத்தில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. "எம்எல்ஏ" என்ற பட்டத்தில் "நீயாசா அடியார்" என்ற பாடலை கண்டசாலாவுடன் இணைந்து பாடினார். இதைத் தொடர்ந்து பல படங்களில் பாடும் வாய்ப்புக் கிட்டியது. 25 ஆண்டுகளில் தென்னிந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், 17 மொழிகளில் பாடியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 ஆம் ஆண்டில் இலங்கை சென்றிருந்த போது இவருக்கு "ஞான கான சரஸ்வதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழ், தெலுங்கு மொழிகளில் பல பக்திப்பாடல்களைத் தாமே எழுதி இசையமைத்துப் பாடியுள்ளார்.

**குடும்பம்...**

இவரது கணவர் காலஞ்சென்ற ராம் பிரசாத். தனது மகன் முரளி கிருஷ்ணாவுடன் சென்னையில் வாழ்ந்து வருகிறார். முரளி கிருஷ்ணா சில திரைப்படங்களில் நடித்திருக்கிறார். 2010களில் ஜானகி சிறிய கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பாடல்கள் பாடியுள்ளார்.2014 ஆம் ஆண்டு வெளிவந்த வேலையில்லா பட்டதாரி திரைப்படத்தில் நடிகர் தனுசுடன் "அம்மா அம்மா" என்ற பாடலைப் பாடியிருக்கிறார்.

**விருதுகள் வெற்றிகள்...**

தேசிய விருதுகள் 4 ,கேரள மாநில அரசு திரைப்பட விருதுகள் 11, நந்தி விருதுகள் 10, தமிழக திரைப்பட விருதுகள் 6, ஒடிசா மாநில திரைப்பட விருதுகள் 1 , 1986 இல் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது 2002 இல் கேரளா மாநில சிறப்பு விருது, 1980 இல் மலையாளப் படம் ஒன்றிற்கும், 1984 இல் தெலுங்குப் படம் ஒன்றிற்கும் தேசிய விருது, ஏழ தடவைகள் தமிழ்நாடு அரசின் சிறந்த பாடகிக்கான விருது , பத்து தடவைகள் ஆந்திர மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருது.

**பத்மபூஷண் விருது மறுப்பு...**

எஸ் ஜானகி 2013 ஆம் ஆண்டு தனக்குக் கிடைக்கவிருந்த பத்ம பூஷண் விருதை ஏற்க மறுத்து விட்டார். இவ்விருது தனது 55 ஆண்டுகால அனுபவத்திற்கு தாமதமாக வந்துள்ளது எனக் கூறிவிட்டார்.

**தேசிய விருதுகள்...**

நான்கு தடவைகள் சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதுகள் கிடைத்தன.

1. 1976, பதினாறு வயதினிலே படத்தில் செந்தூரப் பூவே பாடல்
2. 1980, ஒப்போல் மலையாளத் திரைப்படத்தில் எட்டுமனூரம்பழத்தில் பாடல்
3. 1984, சித்தாரா தெலுங்குப் படத்தில் வென்னெல்லோ கோடாரி அந்தம் பாடல்
4. 1992, தேவர் மகன் படத்தில், இஞ்சி இடுப்பழகா பாடல்

இந்தியாவிலேயே திரைப்படங்களில் அதிகப் பாடல்கள் பாடிய பின்னணி பாடகி என்ற சாதனையைப் படைத்தவர் லதா மங்கேஷ்கர். ஆனால், 17 மொழிகளில் பாடிய ஒரே பாடகி என்ற சாதனைக்கு உரியவர் எஸ்.ஜானகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜானகியின் வாழ்க்கையில், பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய படம் "கொஞ்சும் சலங்கை" (சிங்கார வேலனே தேவா நாதஸ்வர இசையுடன் போட்டி போட்டு பாடும் பாடல், மிகவும் இனிமையான பாடல்) . இசைத்தட்டு விற்பனையிலும் சாதனை படைத்தது இப்படம். இதனைத்தொடர்ந்து, ஜானகி ரொம்பவும் பிசியாகி விட்டார். அவர் பாடல் இடம் பெறாத படமே இல்லை என்ற நிலை ஏற்பட்டது. எல்லா பிரபல கதாநாயகிகளுக்கும் குரல் கொடுத்தார்.

அது மட்டுமல்ல. குழந்தையின் குரலிலும் 60 வயது கிழவியின் குரலிலும் (குரலை மாற்றி) பாடக்கூடிய ஆச்சரியமான திறமையும் அவருக்கு இருந்தது. சில பாடல்கள் ஜானகி அம்மா அவர்களுக்கு என்றே விதிக்கப்பட்டவை. இஞ்சி இடுப்பழகி ,நாதம் என் ஜீவனே,, பொன்வானம் பன்னீர் தூவுது இந்நேரம், ஊருசனம் தூங்கிருச்சு, கண்ணன் வந்து பாடுகின்றான் காலமெல்லாம், ஆயிரம் தாமரை மொட்டுக்களே, பாடவா என் பாடலை, ஒரு பூங்காவனம் புதுமணம் எத்தனை பாடல்கள் இளையராஜாவின் கற்பனைவீச்சை தன் குரலால் சென்று எட்டமுடிந்த ஒரே பாடகி எஸ். ஜானகிதான்.. அளக்க முடியாத வானம் இளையராஜாவின் இசையென்றால், அந்த வானத்தின் ஒரே வானம்பாடி எஸ்.ஜானகியே! ஜானகி A.R ரஹ்மான் இசையிலும் காதலன், உயிரே, ஜோடி, சங்கமம் உள்ளிட்ட பல படங்களில் பாடி இருக்கிறார். சங்கமம் படத்திக்காக இவருக்கு தமிழ் நாடு அரசு விருது கிடைத்தது. இது தவிர கலைமாமணி விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது உள்பட பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ளார்.

தனது இசைப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் ஜானகி - இனி இந்தக் குயில் கூவாது! பிரபல பின்னணி பாடகி ஜானகி தனது 60 ஆண்டு கால இசைப் பயணத்தை முடித்துக் கொள்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.எஸ்.ஜானகிக்கு இப்போது 78 வயதாகிறது. இறுதியாக ஒரு மலையாள தாலாட்டுப் பாடலுடன் ஓய்வுபெற்றுள்ளார். சினிமாவிலும் மேடைகளிலும் பாடியது போதும் என்ற திருப்தியை எட்டியிருப்பதால் இனிமேல் பாடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்..திறமையும் புகழும் எந்தளவு இருந்ததோ அதேயளவுக்கு அடக்கமும், பண்பும் நிரம்பப் பெற்றவர் ஜானகி அம்மா. 60 வருடங்கள்,17 மொழிகள்.48,000 பாடல்கள், 4 தேசிய விருதுகள் எஸ்.ஜானகி எனும் அதிசயம்! அவர் அண்மையில் இசைத் துறையிலிருந்து ஓய்வு பெறுவதாக கூறியது இசை ரசிகர்களை பெரிதும் வருத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது. தென் இந்தியாவின் நைட்டிங்கேள் என்று அழைக்கப்படும் இவர் வாழ்வில் ஓய்வு எடுக்க விரும்புவதாகவும், இனி திரைப்படங்களிலும் சரி, மேடைகளிலும் சரி, பாடப் போவதில்லை என சமீபத்தில் அறிவித்தார்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு விருதுகளை குவித்த இசை மேதை பாலமுரளி கிருஷ்ணா மரணம்.......



பிரபல கர்நாடக இசை மேதை பாலமுரளி கிருஷ்ணா உடல்நலக்குறைவால் 22.11.2016 அன்று காலமானார். தேசிய விருதுகள், பத்ம விபூஷண், செவாலியே, சங்கீத கலாநிதி உட்பட பல விருதுகளை வென்றவர் இவர்.சென்னை ஆர். கே.சாலையில் உள்ள அவரது வீட்டில் உயிர் பிரிந்தது. பத்மவிபூஷண் விருது பெற்ற பிரபல கர்நாடக இசை மேதை பாலமுரளி கிருஷ்ணா உடல்நலக்குறைவு காரணமாக தனது 86ஆவது வயதில் சென்னையில் காலமானார்.

நடிகர், பாடகர், இசையமைப்பாளர் என பன்முகம் கொண்ட பிரபல கர்நாடக இசை மேதை பாலமுரளி கிருஷ்ணா, 1930 ஆம் ஆண்டு யூலை மாதம் 6ஆம் திகதி ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரியில், சங்கரகுப்தம் என்ற ஊரில் பிறந்தார். பாரம்பரியமிக்க இசை குடும்பத்தில் பிறந்த இவர், தனது 6 வயதிலிருந்து கச்சேரிகளை பாட ஆரம்பித்தார்.

இதன் பின்னர் தொடர்ந்து உலக நாடுகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசை கச்சேரிகளை நடத்தினார். தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் 400க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையும் அமைத்துள்ளார். 1967 ஆம் ஆண்டு "பக்த பிரகலாதா" என்ற படத்தில் நாரதர் வேடத்தில் நடித்து அனைவரையும் கவர்ந்தார்.

இவருக்கு இந்திய நாட்டின் உயரிய விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ விருதையும் இரண்டு முறை தேசிய விருது, பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான செவாலியே சிவாஜி விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார்.தமிழில் திருவிளையாடல் படத்தில் இவர் பாடிய "ஒரு நாள் போதுமா" கவிக்குயில் படத்தில் "சின்ன கண்ணன் அழைகிறான்" போன்ற பாடல்களையும் பாடியுள்ளார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூலை 6, 1930 - நவம்பர் 22, 2016)

பிறப்பிடம் - சங்கரகுப்தம், ஆந்திரப் பிரதேசம் இறப்பு - சென்னை
இசை வடிவங்கள் கருநாடக இசை
தொழில்(கள்) கருநாடக இசை பாடகர்
இசைக்கருவிகள் வியோலம், மிருதங்கம், கஞ்சிரா
இசைத்துறையில் 1945 - 2016
முழுப்பெயர் மங்களம்பள்ளி பாலமுரளிகிருஷ்ணா
(யூலை 6, 1930 - நவம்பர் 22, 2016)
தென்னிந்தியாவை சேர்ந்த கருநாடக இசை மேதை. பாடகராக மட்டுமல்லாது, வாக்கேயக்காரர் (பாடல் இயற்றுநர்), இசைக்கருவி வல்லுனர், இசையமைப்பாளர் என பன்முகத் திறன் கொண்டு புகழடைந்தவர்.

தென்னிந்திய மொழிகள் உட்பட 8 மொழிகளில் பாடல்களைப் பாடும் திறமையுடன் விளங்கியவர். கருநாடக இசைக்கான பாடகராக வயலின் இசைக் கலைஞராக வாக்கேயக்காரராக பின்னணிப் பாடகராக இசையமைப்பாளராக ஆலோசகராகப் பணிபுரிந்திருக்கிறார்

பெற்ற விருதுகளும், சிறப்புகளும்

பத்மசிறீ (1971)
சங்கீத நாடக அகாதமி விருது, 1975
சிறந்த பின்னணிப் பாடகர் (ஆண்), 1976 வழங்கியது: இந்தியத் திரைப்பட விருதுகள் அமைப்பு
சங்கீத கலாநிதி விருது, 1978 வழங்கியது: மியூசிக் அகாதெமி, சென்னை
சிறந்த திரைப்பட இசை இயக்குனர், 1987 வழங்கியது: இந்தியத் திரைப்பட விருதுகள் அமைப்பு
சிறந்த பின்னணிப் பாடகர் (ஆண்), 1987 வழங்கியது: கேரள மாநில திரைப்பட விருதுகள் அமைப்பு
பத்ம விபூசண் (1991)
சங்கீத கலாசிகாமணி விருது, 1991 வழங்கியது தி இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி
இசைப்பேரறிஞர் விருது, 2002
சங்கீத கலாசாரதி (2002)
சிறந்த பாரம்பரிய இசைப் பாடகர், 2010 வழங்கியது: கேரள மாநில திரைப்பட விருதுகள் அமைப்பு
யுனெஸ்கோ அமைப்பு வழங்கிய மகாத்மா காந்தி வெள்ளிப் பதக்கம்
செவாலியே விருது, வழங்கியது: பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி போக்குமா வழி!...

தாயகத்து ஊற்று நிலம் தாங்குகின்ற வலி
தளர்வுகளில் தமிழினமே ஏங்குகின்ற வழி
படர்கிறதே பல திசையில் போர் தந்த வலி
பாதையிட்டு செப்பினிட யார் இதற்கு அணி
நாற்றிட்ட விருட்சமாய் நம்மிழீழக்கனி
நலிந்து நொந்து நாளாந்தம் தாங்கும் பல வலி
உடைந்து போன உள்ளங்களே ஈழ மண்ணின் விதை
இழந்து போன காயங்களே ஈட்டிதைக்கும் முளை
வீரத்தின் கொடையிலே வித்தானோர் பலர்
கோரத்தின் சாவிலே அழிவுற்றோர் சிலர்
ஞாலத்தின் கண்களில் இருள் சூழ்ந்த நிலை
நம்பிக்கை வழி காட்டி வலி போக்க வருவீர்
இழந்தவைகள் ஈடு செய்ய நீங்களே
இடர் போக்கும் வலி அகற்ற வழி
வழி சொல்வீர் இனி!...

திருமதி வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி

## முற்போக்கான திருமணம்!...

யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலிலகடந்த 25-09-2016 அன்று நடைபெற்ற திருமணம் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது, இரு கண்களும் தெரியாத முன்னாள் போராளியின் திருமணமே! என கூறப்படுகிறது, இந்த புதிய ஜோடியினை நாங்களும் வாழ்த்துவோம். நடைமுறையில் பல சவால்களை எதிர் கொள்ளும் நிலையில் இப்படியும் ஒரு வாழ்க்கை அமைகிறது முன்னாள் போராளிக்கு என நினைக்கையில் ஓரளவு மனதிற்கு ஆறுதலாக உள்ளதாக போராட்டத்திற்காக தங்களை அற்பணித்தவர்கள் கூறுகிறார்கள்.

போரின் வடுக்களால் பல ஆயிரக்கணக்கான போராளிகள் விழப்புண் ஏற்று எதிர்கால வாழ்வையே இழந்து தவிக்கிறார்கள். மறுவாழ்வு வாழமுடியாமல் சொல்லொணாத்துயரில் தத்தளிக்கிறார்கள். இவர்கள் மறுவாழ்வு பெற்று நல்லபடியாக வாழவேண்டும். இவர்களுக்கு வாழ்வளித்துப் புதுவாழ்வு கொடுக்க வேண்டும். இந்தத் தியாகிகளுக்கு மறுவாழ்வு அளிக்க முன்வரும் தியாகச் செம்மல்களை வாழ்த்துவோம். வாழ்துவதுடன் முடிந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட நல்ல மனம் படைத்தவர்களுக்கு நாமும் ஏதாவது சிறு உதவிகளையாவது செய்திடுவோம். அவற்றை இன்றே செய்வோம்!.. நன்றே செய்திடுவோம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்காலம் வந்தாலே நம்மை பல தொற்றுநோய்கள் தாக்கத்தொடங்கிவிடும்....

இந்தகுளிர்காலங்களில் நாம்உட்கொள்ளும் உணவுகளைசிறந்தஊட்டச்சத்து நிரம்பியவைகளாக தெரிவுசெய்து உட்கொள்ளவேண்டும். இதன்மூலம், குளிர்காலங்களில் ஏற்படும் ஜலதோஷம், காய்ச்சல்போன்ற நோய்களிடம் இருந்து நம்மைபாதுகாத்து ஆரோக்கியமாக உடல்வளத்தை பெறலாம்
காய்ச்சல் போன்ற நோய்களிடம் இருந்து நம்மை பாதுகாத்து ஆரோக்கியமாக உடல்வளத்தைபெறலாம்.

### இஞ்சி சிகிச்சை

மருத்துவப்பலன்களைப்பெற்ற இஞ்சி குழந்தைகள்மற்றும்பெரியோர்களால்உட்கொள்ளப்படும் பொதுவானஉணவாகும். இதுஜலதோஷத்திற்கும்,காய்ச்சலுக்கும் சிறந்த சிகிச்சையை அளிக்கக்கூடியது. இதுகுளிர்காலத்தில் வெப்பம்தரும் உணவுகளில் ஒன்றாகும். ஒருகப் இஞ்சி டீ அருந்தினால், அதுஉங்கள்உடலில்உள்ள கொழுப்பு அமிலங்களை ஜீரணிக்கஉதவிபுரியும். மேலும், அசிடிட்டியைபோக்குவதற்கும்உதவிபுரியும்

### தேன்

இந்தகுளிர்காலங்களில் உங்கள்உணவில் தேனை சேர்த்துகொள்ளுவதுமிகச்சிறந்த ஒன்றாகும். இதுஉங்கள் ஜீரணசக்தியை அதிகரித்து உங்கள் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.மேலும், உங்கள் நோய்எதிர்ப்புச்சக்தியையும்மேம்படுத்த உதவிபுரியும்.

### பாதாம்

பாதாமானது அதிக அளவில்பலன்களை அளிக்ககூடியதால் இதுகுளிர்காலங்களில் உட்கொள்ளும் உணவுகளில் மிகச்சிறந்த ஒன்றாகும்.
இதுபொதுவாகக் குளிர்காலங்களில் ஏற்படும் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவிபுரியும். இது சர்க்கரைநோய்க்குச் சிறந்தமுறையில் சிகிச்சை அளிக்கும். வைட்டமின் ஈ நிறைந்துள்ளதால் உங்கள் சருமத்திற்கும் சிகிச்சை அளிக்கும் சிறந்த உணவாகும்.

### எள்ளுவிதைகள்

குளிர்காலங்களில் எள்ளுவிதைகளை உங்கள்உணவில் சேர்த்துக்கொள்வதால் சிறந்தபலனைப் பெறலாம். குளிர்காலங்களில் உங்கள் உணவில் வெப்பம் தரும்உணவுகளை கட்டாயம் சேர்த்துகொள்ளவேண்டும்.

### ஒமேகா-3 கொழுப்புஅமிலங்கள்

இந்தஒமேகா-3 கொழுப்புஅமிலங்கள்குளிர்காலங்களில் சாப்பிடவேண்டிய உணவுகளில் சிறந்த ஒன்றாகும். மீன்களில் அதிக ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்திருக்கும். தேவையான அளவுமீன்களைஉட்கொள்ளுவது குளிர்காலங்களில் உங்கள்உடலைஆரோக்கியமாக வைப்பதற்குஉதவிபுரியும்.
இதில்அதிகஅளவில் ஜிங்க் நிறைந்துள்ளதால் உங்கள் உடலில் உள்ள வெள்ளை இரத்த அணுக்களின் செயல்திறனை அதிகரிக்க உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரிக்காய்...

கத்தரிக்காய் குண்டு கத்தரிக்காய் என்று கத்தரிக்காயை வைத்து ஒரு சினிமா பாட்டும் இருக்கு!கத்தரிக்காயை வைத்துப் பல விதமாக சமையல் செய்யலாம் அதிலும் கத்தரிப் பொரியலும், பொரித்த வத்தல் குளம்பும், நினைத்தாலே வாயூறும். கத்தரிச்செடியின் தாய் நாடு இலங்கை இந்தியா போன்ற ஆசிய நாடுகளே! பின்னர் அது பரவலாகி இப்ப மேலை நாடுகளிலும் வளர்க்கத் தொடங்கி விட்டார்கள் இச்செடியை.கத்தரிக்காயிலும் பல வகை உண்டு சிறிய மெல்லிய கத்தரிக்காய், சிறிய குண்டுக் கத்தரிக்காய், வெள்ளைக் கத்தரிக்காய், வெள்ளை நிறத்தில் புள்ளி விழுந்த கத்தரிக்காய், நீட்டு மெல்லிய கத்தரிக்காய், மேலும் இளகிய நாவல் நிறத்தில் கொஞ்சம் குண்டான கத்தரிக்காய், அதை விட சுண்டங்கத்தரி என்று ஒரு வகை இப்படி பல விதமான பல சுவை கொண்ட கத்தரிக்காய்களை காணக்கூடியதாக உள்ளது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவையுடன் எமது சமையலில் முதன்மையான இடத்தை பெறுகிறது. யாராச்சும் விருந்துக்கு வருவதென்றாலும் வீட்டில் ஏதாவது விசேஷம் என்றாலும் சமையல் பொருட்கள் வாங்கும் போது நம்மவர் கத்தரிக்காயை மறக்காமல் வாங்கி விடுவார்கள் மரக்கறி சமைப்பது என்றாலே அதில் முதல் இடத்தை பெறுவது கத்தரிக்காய்தான்.

கத்தரிக்காயில் பொரித்த வத்தல் குழம்பு, கத்தரிக்காய் பொரியல், கத்தரிக்காயில் சுட்டு சம்பல், கத்தரிக்காய் வெள்ளை கறி, அதை விட கத்தரிக்காய் மற்ற மரக்கறிகளுடன் சேர்த்து சமைக்கும் போதும் அதன் சுவை குன்றாது,

கத்தரிக்காயும் முருங்கைக்காயும் சேர்த்து வெள்ளைக் கறியோ பிரட்டலோ வைத்துப் பாருங்கள் அதுவும் சுவையோ சுவைதான். கத்தரிக்காய் பல வடிவங்களில் இருந்தாலும் அது எமக்கு உடல் நலத்துக்கு உகந்த ஒரு காய் கறி வகையாகும் அதில் கிரந்தி இருக்கு ஒத்து வராது என்ற பலர் சாப்பிடாமல் இருக்கிறார்கள் அவர்களை நான் மூடர்கள் என்றே சொல்வேன், அதில் எந்த தீங்கும் இல்லை கத்தரிக்காயை வெட்டி வெளியிலே கன நேரம் வைக்கக் கூடாது கறுத்து விடும்,

அதை வெட்டிய உடனே சிறிது உப்பு கலந்த தண்ணியில் போட்டு வைக்கலாம், அல்லது குத்தரிசி கழுவிய தண்ணி களனியில் ஊற வைக்கலாம் அப்படி செய்யும் போது அதில் உள்ள கயர்த்தன்மை எடுபட்டு விடும். கத்தரிக்காயை எப்படி சாப்பிட்டாலும் எம்மட்டு சாப்பிட்டாலும் எமது உடலின் எடை கூடாது, இன்னும் எமது இரத்தத்தில் உள்ள கொழுப்பை கத்தரிக்காய் குறைக்க உதவுகிறதாம் என்று நாட்டு வைத்தியர்கள் சொல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காய் பொரிக்கும் போது அதிக எண்ணெயை உறிஞ்சும் அதனால் நல்ல ஆரோக்கியமான நல்லெண்ணெயில் அல்லது ஒலிவ் எண்ணெயில் பொரித்து எண்ணெயை வடித்து எடுக்கவும். மேலும் சமைக்கும் போது கத்தரிக்காய் அமிழ்ந்து நிக்கும் படியாக தண்ணி கொஞ்சம் மேலே நிக்க விட்டுத்தான் சமைக்க வேணும் அதிகம் தண்ணியும் விடக்கூடாது பிறகு கறி சொள சொள என்று ஆகி விடும்.

அத்துடன் சமைக்கும் போது மூடி வைக்க வேணும் ஒரு 10 நிமிடம் வரை மூடியை திறக்க கூடாது அடிக்கடி கெதியாக மூடியை திறந்து பார்த்தால் கத்தரிக்காய் கண்டிப்போகும் என்று எனது தாயார் சொன்ன ஞாபகம் வருகிறது. எனவே நல்லாக அவிந்திருக்கும் என்ற பின்னே திறந்து துளாவ வேணும்.கத்தரிக்காயின் மருத்துவ குணம் என்ன வென்றால் இதில் நிறைய விற்றமின்களும், இரும்புச்சத்து, நார்ச்சத்து, பொஸ்பரஸ், புரதம், மாப்பொருள் என எல்லாவித சத்தும் கொண்டிருப்பதால், இந்தக் கத்தரிக்காய் அஸ்துமா, வாதநோய் போன்ற வற்றை குறைப்பதுடன் இரத்தத்திலுள்ள கொழுப்பையும் கரைக்க உதவுவதால் இதை பயமின்றி யாவரும் சமைத்து உண்ணலாம்.

நீரிழிவு நோயாளிகளும் பயமின்றி சாப்பிடலாம் இதனால்தானே நோய்வாய் பட்டவர்களுக்கும், பிள்ளை பெற்ற தாய்மார்களுக்கும் பத்தியம் வைக்கும் போது கத்தரிக்காய்ப்பிஞ்சு தேடி வாங்குவார்கள் ஊரிலே, ஆனால் பச்சைக் கத்தரிக்காயை கடித்தால் பல்லில் சொத்தை விழும் என்று சிறுவர்களை பயமுறுத்தச் சொன்னார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். கத்தரிக்காய் ஒரு சுவையான உடல் நலத்துக்கு தீங்கு செய்யாத மரக்கறியாகும் அதனால் வாங்குங்கோ கம கமக்க பக்குவமாய் கருவேப்பிலை பெருஞ்சீரகத்தூள் சேர்த்து சமையுங்கோ வாயார ரசித்து ருசித்து உண்ணுங்கோ!

கவி மீனா
ஜேர்மனி

---

பொன் மொழிகள்.......

-உனது கௌரவம் உனது நாக்கின் நுனியில் இருக்கிறது.

-தொடக்கத்தைவிட முடிவைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.

-தாயின் ஆசிக்கு உலகில் நிகர் எதுவுமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் அமரர் ராஜன் முருகவேள்........(ஜேர்மனி)



யாழ்-சுழிபுரம் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனியில் வாழ்ந்து வந்தவருமான ராஜன் முருகவேள் அவர்கள் கடந்த 13-11-2016 அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி எம்மை துயர்கொள்ள வைத்தன. கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழ் எழுத்துத்துறைக்கு தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்ட இவர் ஜேர்மனியில் பல ஆண்டுகள் வெளிவந்த "கடல்" என்ற சமூக சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றினார். ஜேர்மனியில் வெளிவந்த சிறுவர் அமுதம், மண், பூவரசு, ஏலையா, தூண்டில், தமிழ்நாதம், போன்ற வேறு பல சஞ்சிகைகளுக்கும் ஐரோப்பாவில் வெளிவந்த பல பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி, இணையத்தளங்களுக்கும் பல படைப்புக்களை வெளிக்கொண்டு வந்தவர் என்ற பெருமையையும் பெற்றவராவர்.

தமிழ் இலக்கிய எழுத்து, சமூகத்துறைக்குப் பல படைப்புக்களைப் படைத்துவந்த இவர் கடந்த பத்து வருடங்களுக்கு மேல் "தமிழ் அமுதம்" என்னும் பெயர்கொண்ட இணைத்தளத்தின் பிரதம நிர்வாகியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில்தான் நோய்வாய்ப்பட்டுக் காலமாகியுள்ளார். கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் எழுத்துத்துறையோடு ஒன்றிணைந்து வாழ்ந்த இவர் ஐரோப்பாவில் பல தமிழ் ஊடகங்கள் அவ்வப்போது நடாத்திவந்த சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளிலும் பல தடவைகள் பரிசில்களையும் பெற்றிருக்கிறார். மண் சஞ்சிகையோடும் 1990 ம் ஆண்டு முதல் நல்ல உறவைப் பேணிவந்ததுடன் நீண்டகாலமாகப் பல படைப்புக்களையும் படைத்துப் புகழ்பெற்றவர் என்ற பெருமைக்குரியவராவர். அமரர் ராஜன் அவர்கள் எனது உற்ற நண்பர். இருவரும் ஜேர்மனியில் பல மேடைகளில் பல அரங்க நிகழ்வுகளில் கலந்துகொண்டு திறமைகளை வெளிப்படுத்தியதுடன் தமிழ் வளர்ச்சிக்கும் எதிர்கால தமிழ்ச்சிறார்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியிருக்கிறோம். அந்த வகையில் அன்னாரின் இழப்பானது என்போன்ற பல இலக்கியவாதிகளை துயர்கொள்ள வைத்துவிட்டது. பிரிவுத்துயரில் வாடும் அவரது மனைவி பிள்ளைகள் யாவருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்!...

## சங்கைக்குரிய. ஒலிவியா யோசவ் சின்னத்துரை.



"உமது வலது கரத்தால் என்னைத்தாங்கிக் கொண்டீர்
உமது வல்லமையால் என்னை எடுத்துக்கொண்டார்"

நெடுந்தீவு கிழக்கு யோசவ் சின்னத்துரை ஆசிரியரும், ஆயுள்வேத வைத்தியரும் மேரி திரேசா ஆகியோரின் அன்புப் புதல்வியும் ஆசிரியையுமான சங்கைக்குரிய சகோதரி ஒலிவியா அவர்கள் (திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்) கடந்த 30.09.2016 அன்று யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார். எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர் அக்கா. கண்ணீரில் நாம் தோய எம்மைப்பிரிந்து சென்ற அக்காவே ஆறாது எமது துயரம். மாறுமோ உங்கள் நினைவு. விதி என்னும் இரு எழுத்து உங்களுக்கு நோயை ஏற்படுத்தி இறைவனில் நித்தியமாய் துயில்கொண்டதோ. எம் அன்பான அக்கா உயிர் உள்ளவரை உமை மறவோம் உங்கள் நினைவுகள் ஒருபோதும் எம்மைவிட்ட அழிவதில்லை..

இறையன்பை நிறைவாக மனதில் கொண்டு
ஆன்மீகம் அதனையுங்கள் அகமதில் பதித்து
அர்பண வாழ்வில் இறைவன் சித்தம் பெற்று
ஐம்பது ஆண்டு நிறைவில் பொன்விழா கொண்டாடி
அங்கத்தவர்கள் உறவுகளை மகிழ வைத்து
தூய உள்ளத்தடன் பண்புடை மகளானீர்
பற்பல இடங்களில் ஆசிரியர் தொழில் புரிந்து
மாணவப் பயிர்களை அறுவடை செய்த சகோதரியே
உத்தமனார் பாதமதில் உவப்போடு தொண்டுசெய்து
ஏழைகளுக்குக் கைகொடுத்த பணக்காரச் சிஸ்டரென
அர்ப்பணிப்புடன் ஆற்றிய அருட்பணிக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் நகையை காவாமல் புன்னகையைக் காவி
சித்திரப் பூவைப்போல் சிரித்திடும் பாசச்சிரிப்புடன்
சின்னச்சின்ன வார்த்தைகள் ஆழ்ந்த அறிவுரைகள்
அத்தனையும் சாதனையாய் காத்து வாழச் செய்தீர்
எங்களின் இருள் மனதை ஒளியாக்க வழி சமைத்தீர்
ஒற்றுமை வளர்த்து உறவுகள் மலர துணை சேர்த்தீர்
இறைவனில் நித்தியமாய் துயில்கொள்ளும் அக்காவே
எம் இதயத்துயரம் பிரிவு அகலவில்லையே-நீங்கள்
பக்தி நெறியாளியாய் வாழ்ந்த காலங்களை
மறக்க முடியவில்லையே மரியன்னையின் பக்தரே
என்றும் இறைவனின் புகழ்பாடி இளைப்பாறுங்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்...

சாந்தி!...சாந்தி!.... சாந்தி!...

சகோதரி ஜெயா நடேசன் – ஜேர்மனி

---

# பகிர்வு..

ஈழமும் தமிழும் தமிழ் வரலாற்றில் 1841ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பெற்ற உதயதாரகை பத்திரிகை பற்றி பலருக்குத் தெரியும். இதனைத் தொடங்கிய ஆசிரியர்களுள் ஹென்றி மார்ட்டின் அப்புக்குட்டியும் ஒருவர்.முற்காலத்திலே நேரத்தை அளப்பதற்கு தமிழர்கள் நாழிகை என்னும் அளவைப் பயன்படுத்தினர்.

| | |
|---|---|
| 1 நாழிகை | - 24 நிமிடம் |
| 2.5 நாழிகைகள் | - 1 ஓரை |
| 3.75 நாழிகைகள் | - 1 முகூர்த்தம் |
| 7.5 நாழிகைகள் | - 1 சாமம் |
| 30 நாழிகைகள் | - 1 பொழுது |
| 60 நாழிகைகள் | - 1 நாள் |

நாழிகை அளவை மணிநிமிட அளவாகவும் மணி நிமிட அளவை நாழிகை அளவாகவும் மாற்றுவதற்கு அறிந்துகொண்ட முதல் சுதேசியாக ஹென்றி மாட்டின் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோய்

பெறப்பட்ட நோய்த்தடுப்பாற்றல் குறைபாடுகளின் நோய்க்கூட்டறிகுறி அல்லது பெறப்பட்ட மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு நோய்க்கூட்டறிகுறி (Acquired immune deficiency syndrome) என்பது எச்.ஐ.வி எனப்படும் மனிதனின் நோய் எதிர்ப்பாற்றல் குறைப்பு செய்யும் திறன் கொண்ட தீ நுண்மத்தால் (வைரசால்) ஏற்படுகிற ஒரு நோயாகும்

உலக எய்ட்ஸ் நாள் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இந்நாள் எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. எய்ட்ஸ் நாள் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988 இல் நடைப்பெற்ற, எய்ட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் உருவானது. அதன் பிறகு அரசுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

எயிட்சு மேலும் பரவாமல் தடுக்கவும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தான் உலகளாவிய இந்த தினத்தின் நோக்கமாகும். எயிட்சு பாதிப்புக்கு உள்ளானவர்களின் உணர்வுகளை மதிக்கவும் அவர்களின் உரிமைகளை மதிக்கவும் மக்களை பழக்குவதும் இதன் முக்கிய குறிக்கோளாகும்.

எச் ஐ வி பாதிப்புக்குள்ளான மக்களை அதிகம் கொண்டுள்ள இரண்டாவது நாடு இந்தியா ஆகும். 35 % எயிட்சு நோயாளிகள் 15 முதல் 24 வயதிற்கு உட்பட்டவர்களே. 86 % பாதுகாப்பு அற்ற உடலுறவின் மூலமாகவும், 4 % எச் ஐ வி தொற்று உள்ள கர்ப்பிணிகளின் மூலமாகவும், 2 % சரியாக சுத்தம் செய்யப்படாத ஊசிகளை பயன்படுத்துவதின் மூலமும், 2 % பரிசோதனை செய்யப்படாத ரத்தத்தின் வழியாகவும், மீதி 6 % பிற காரணங்களாலும் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிட்சு முதன்முதலாக ஜூன் 5, 1981 இல் அமெரிக்க நோய்க்கட்டுப்பாட்டு மையங்களில் (CDC) கண்டறியப்பட்டது. இம்மையங்கள் (CDC) லாஸ் ஏஞ்சல்ஸின் 5 ஓரினச்சேர்க்கையாளர்களிடையே நியுமோசிஸ்டிஸ் கரினியை நிமோனியாவைக கண்டுபிடித்தது . இப்பொழுதும் PCP என்றே வகைப்படுத்தப்பட்டு நியுமோசிஸ்டிஸ் ஜிரோவேசியையால் உண்டாவதாகக் கருதப்படுகிறது. எயிட்சு ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு மட்டும் உரியதல்ல எனக் கண்டறிந்த பின்னர் 'கிரிட்' (GRID) என்ற சொல் பொருத்தமானதாகத் தோன்றாத காரணத்தால் 1982 ஜூலையில் எயிட்சு என்ற சொல் அறிமுகப்பட்டது.

செப்டம்பர் 1982 க்குள் CDC எயிட்சு என்ற பெயரை உபயோகப்படுத்த ஆரம்பித்து இந்நோய்க்கு சரியான விரிவாக்கத்தை அளித்தது. எச் ஐ வி ஆப்பிரிக்காவிலிருந்து ஹைதிக்குச் சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்றிருக்கலாம் என்று அண்மைய ஆய்வொன்று தெரிவிக்கிறது. எச் ஐ வி கிருமி கமரூன் நாட்டில் இருந்த சிம்பன்சியை மனிதன் வேட்டையாடி அதை வெட்டும் போது சிம்பன்சியின் இரத்தம் அதை இறைச்சிக்காக வெட்டிய மனிதனின் கையில் இருந்த காயம் மூலம் பரவியிருக்கலாம் என கருதப்படுகிறது

எய்ட்ஸ் நோயின் தோற்றம் பற்றி ஆராய்ச்சிகளை நடத்திய மேற்குலக விஞ்ஞானிகள் 1920களில் காங்கோ மக்களாட்சிக் குடியரசு நாட்டில் கின்ஷாஸா நகரில் இருந்துதான் ஹெச்.ஐ.வி கிருமி பரவ ஆரம்பித்தது என்று கூறுகின்றனர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.ஐ.வி. எயிட்சுக்கான சிகிச்சை, நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வல்லதாயிருந்தாலும் தற்சமயம் இந்நோய்க்கு தடுப்பூசியோ நிரந்தர தீர்வோஇல்லை. மீளூட்டுநச்சுயிரி எதிர்மருந்து எச்.ஐ.வி. நோயின் இறப்புவிகிதத்தையும், பாதிப்பு விகிதத்தையும் குறைக்க வல்லதாயிருந்தாலும் இம்மருந்துகள் விலையுயர்ந்தனவாகவும், கிடைப்பதற்கு அரியனவாகவும் இருப்பதால் அனைத்து நாடுகளிலும் வாடிக்கையாக கிடைப்பதில்லை இந்நோயை குணப்படுத்துவதற்கு உள்ள இத்தகைய இடர்பாடுகளால், நோய் வராமல் தடுத்தலே இப்பரவல் தொற்றுநோயைக் கட்டுபடுத்துவதிலுள்ள முக்கிய குறிக்கோள் எனக்கருதி வைரசின் பரவலைத் தடுக்க சுகாதார நிறுவனங்கள் பாதுகாப்பான உடலுறவையும், புதிய ஊசிகளை பயன்படுத்துதலின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றனர்.

அடையாளம் காணப்படாமல் இலங்கையில் 2000 எயிட்ஸ் நோயாளிகள்!

HIV தொற்றுக்குள்ளான இதுவரை அடையாளம் காணப்படாத சுமார் 2000 பேர் இலங்கையில் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.HIV தொற்றுக்குள்ளான 2400 பேர் வரை இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சின் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சிசிர லியனகே குறிப்பிட்டார். அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 50 வீதமானோர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்றும் பாலியல் நோய்கள் தொடர்பான பிரிவின் பணிப்பாளர் கூறினார்.

இது தவிர நிர்மாணங்கள் இடம்பெறும் சூழல்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் HIV தொற்றுக்கு இலக்காகியுள்ளமை தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் நாடாளவிய ரீதியில் 2436 பேருக்கு எச்.ஐ.வி. நாடாளவிய ரீதியில் 2 ஆயிரத்து 436 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன 394 பேர் மரணடைந்ததற்கான பதிவுகள் உள்ளதாகவும் குறிப்பிட்டார். உலகிலுள்ள நோய்களில் மிகக்கொடிய நோயாகக் கருதப்படும் இந்த நோயால் வருடாவருடம் பல்லாயிரம் மக்கள் மாண்டு அழிகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கியநாடுகள் சபையின் உலக சுகாதார தாபனத்தின் இந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையின்படி உலகின்சில புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளது. அவற்றை பார்ப்போம்....

| | ஆண்டு 2000 | ஆண்டு 2005 | ஆண்டு 2010 | ஆண்டு 2015 |
|---|---|---|---|---|
| -புதிதாக அடையாளம் காணப்பட்டவர்கள் தொகை | 3.1மில் | 2.7மில் | 2.2மில் | 2.1மில் |
| -இறந்தவர்கள் தொகை | 1.6மில் | 2.0மில் | 1.5மில் | 1.1மில் |
| -சிகிச்சை பெற்றவர்கள் | 0.7மில் | 2.2மில் | 7.5மில் | 17.0மில் |
| -மொத்தமாகப் பாதிக்கப்பட்டவர்கள் | 30மில் | 34மில் | 35மில் | 38மில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 ஆண்டு கால தாய்லாந்து சரித்திரம் சரிந்தது!...



**பிறப்பு 05.11.1927 (பதவிக்காலம் 09.06.1946-13.10.2016)**

70 ஆண்டுகள் தாய்லாந்து மன்னராக நீடித்தவர் என்ற பெருமை பெற்ற பூமிபோல் அதுல்யாதேஜ் காலமானார் என அரண்மனை செய்தி குறிப்பு வெளியிட்டுள்ளது. தாய்லாந்து நாட்டின் 234 ஆண்டுகள் மன்னராட்சியில் 9-வது மன்னராக நீடித்தவர். உலகிலேயே அதிக நாட்கள் மன்னராக பதவியில் நீடித்தவர் என்ற பெருமைக்குரியவர் பூமிபோல்.இவர் கடந்த சில காலம் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் பாங்காக்கில் உள்ள சிரிராஜ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது.ஆனால் பூமிபோல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அரண்மனை செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்து நாட்டில் கடந்த ஒரு நூற்றாண்டில் 20 முறை ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தது. இதில், 12 வெற்றிகரமாக முடிந்தது. ஆனாலும், நாட்டின் பாதுகாவலன் போல், மக்களுக்கு மிகவும் பிடித்தவராக பார்க்கப்பட்டவர், மதிக்கப்பட்டவர் பூமிபோல்.இவருடைய ஆட்சிக் காலத்தில்தான், தாய்லாந்து நாடு மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியை பெற்றது. அரிசி என்பது இவர்களது கனவாகவே இருந்தது. இன்று உலகிலேயே அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் தாய்லாந்தும் முன்னணியில் உள்ளது அரசர் பூமிபால், அமெரிக்காவின் கேம்பிரிட்ஜில் பிறந்தவர் , ஜூன் 9 1946-ல் அரியணையில் அமர்ந்துள்ளார்.இவர் இறந்ததைத் தொடர்ந்து தாய்லாந்தின் புதிய மன்னராக மகா வஜ்ஜிரலாங்கோன் அறிவிக்கப்பட்டுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகப்பயணம்......

கௌசி – ஜேர்மனி



நான் இலங்கை மண்ணில் கழித்த விடுமுறை காலங்களில் நான் அனுபவித்த சில அனுபவப் படிவங்களை என் வாசகர்களுக்கு வழங்குகின்றேன்.
ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் போர் கண்டு மீண்டு தலைநிமிர்த்தி வேறு நாடுகளின் கண்களை விரியச் செய்து திரும்பிப் பார்க்க வைக்கின்றன. அந்த வரிசையில் இலங்கை இன்று வளர்ச்சிப் படிகளில் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. மனங்களையும் மண்ணையும் மாற்றிமாற்றிப் பார்க்கின்றேன். மண் வேற்று நாடுகளை விஞ்சத் துடிக்கின்றது. மனங்கள் மனிதத்தை மறக்கத் துடிக்கின்றன. இவ்வேறுபாட்டினுள்ளும் அன்புள்ளம் கொண்ட அரவணைப்புள்ளங்களும் இருக்கவே செய்கின்றன.
இவ்வருட (2016) விடுமுறை இலங்கை மண்ணிலே கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலனறுவை போன்ற நகரங்களிலே கழிந்தது. மறக்க முடியாத என் முக்கோண முக்குளிப்புத் தாயக வெளியீடும் அதனுடன் இணைந்து கொண்டது. முதலில் என் நூல் வெளியீடு பற்றி சிறிது தெளித்து விட்டு மண்ணின் மறக்கவொண்ணாச் சுவையையும் தருகின்றேன்.என் கனவு நிஜமான நாள் 28.08.2016. தமிழ்ச்சங்க மேடை என் எழுத்துக்கு அங்கீகாரம் வழங்குமா? என்னும் கேள்வி என் இளவயதில் இதயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குமா? என்னும் கேள்வி என் இளவயதில் இதயத்தில் இருந்தது. அக்கேள்விக்கு அன்றைய நாள் விடை தந்தது. என் நூல் மலேசியா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் வெளியீடு செய்யப்பட்டடிருந்தாலும் கொழும்புத் தமிழ் சங்கத்து மேடையிலே வீற்றிருந்த காட்சியே என் நெஞ்சுக்கு மிக்க மகிழ்வைக் கொடுத்தது. வீரகேசரி சங்கமம் ஆசிரியர் ஜீவா சதாசிவம் நிகழ்ச்சித் தொகுப்பில் நூல் வெளியீடு இடம்பெற்றது. தலைமைப் பொறுப்பை கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் தம்பு சிவா அவர்கள் எடுத்திருந்தார்.

கௌரவ விருந்தினர்களாக ஞானம் சங்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் அவர்களும், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர் திரு. உடுவை தில்லைநடராஜா அவர்களும், தடாகம் கலை இலக்கிய வட்ட அமைப்பாளர் கலைமகள் ஹிதாயா அவர்களும், ஊற்று வலையுலக எழுத்தாளர் மன்ற செயலாளர் யாழ்பவாணன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். அறிமுகவுரை ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் பாரதி ராஜநாயகம் அவர்கள் வழங்கினார். விமர்சன உரையை தகவம் அமைப்புச் செயலாளர் வசந்தி தயாபரன் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார். முதலாவது பிரதியை புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனர் ஹாசிம் உமர் எனது சகோதரன் திலகராஜ் இடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

தமிழ் மொழி வாழ்த்து எனது மருமகள் சதுர்ஷா அவர்கள் பாடினார்.விழா 3 மணிக்கு ஆரம்பித்து 6 மணிக்கு முடிவுற்றது. எழுத்தாளர்கள், வாசகர்கள், எழுத்துலக ஜம்பவான்கள் நிறைவில் மண்டபம் சிறப்புற்றிருந்தது. ஊற்று வலையுலக எழுத்தாளர் மன்றத்தினர் "நவயுக கவிதாயினி" என்னும் பட்டத்தை எனக்கு வழங்கிக் கௌரவித்தனர். அதேபோல், தடாகம் கலை இலக்கிய வட்டத்தினர் கவினெழி பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்தனர். அவ் இரண்டு அமைப்பினர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் வரவேற்புரை எனது மகள் மெனுஷா நிகழ்த்தினார். நூல் விமர்சனம் திருமதி வசந்தி தயாபரன் நிகழ்த்தினார். திரு. தம்பு சிவா, திரு. உடுவை தில்லை நடராஜா ஆகியோர் நூல்களைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடல் காஸ்ட்ரோ (Fidel Alejandro Castro Ruz)

பிறப்பு ஆகஸ்ட் 13, 1926 பிரான், கியூபா
இறப்பு நவம்பர் 25, 2016(அகவை 90) சந்தியாகோ தெ கியூபா மாகாணம், கியூபா
கியூபாவின் 17வது அரசுத்தலைவர் பதவியில் - டிசம்பர் 2, 1976 -பெப்ரவரி 24, 2008
கியூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைச் செயலாளர் பதவியில்யூன் 24, 1961 - ஏப்ரல் 19, 2011
கியூபா அமைச்சர்கள் பேரவையின் தலைவர் பதவியில் டிசம்பர் 2, 1976 - பெப்ரவரி 24, 200
கியூபாவின் 16வது பிரதமர் பதவியில் பெப்ரவரி 16, 1959 - டிசம்பர் 2, 1976
(அணிசேரா நாடுகள்) கூட்டுச்சேரா இயக்கத்தின் 7வது, 23வது பொதுச் செயலாளர் பதவியில் செப்டம்பர் 16, 2006 - பெப்ரவரி 24, 2008
அரசியல் கட்சி பழமைவாதக் கட்சி (1946-1952)
யூலை 26 இயக்கம் (1953-1965)
கியூபாவின் பொதுவுடைமைக் கட்சி (1965-2016)
வாழ்க்கை துணைவர்(கள்) மிர்த்தா டயசு-பலார்ட் (1948-55)
தாலியா சோட்டோ டெல் வால் (1980 முதல்) பிள்ளைகள் 9
இருப்பிடம் சந்தியாகோ டெ கியூபா
படித்த கல்வி நிறுவனங்கள் ஹவானா பல்கலைக்கழகம்
தொழில் - வழக்கறிஞர்

பிடல் காஸ்ட்ரோ கியூபாவைச் சேர்ந்த பொதுவுடைமைப் புரட்சியாளரும் பொதுவுடைமை அரசியல்வாதியும் ஆவார். கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ ,1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.கியூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளராக 1965 இல் பதவியேற்ற இவர் கியூபாவை ஒற்றைக் கட்சி சமூகவுடைமைக் குடியரசாக்கினார். 49 ஆண்டுகள் கியூபாவை ஆண்ட காஸ்ட்ரோ பிப்ரவரி 24 2008 அன்று பதவியிலிருந்து விலகினார். உலகத்தில் நீண்ட காலத்துக்கு தலைமைப் பொறுப்பில் இருந்த தலைவர் காஸ்ட்ரோ மட்டுமே. சர்வதேச அளவில், காஸ்ட்ரோ 1979-ல் இருந்து 1983 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை, அணி சேரா இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்துள்ளார். அமெரிக்காவில் இருந்து 93 மைல் தூரத்தில் இருந்தாலும் கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரைச் சாரும். இதைவிட ருசியா-அமெரிக்க பனிப்போர் நடந்த வேளையில் இவர் ருசியாவிற்குச் சாதகமாகப் பல பணிகளைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முதல் அரசியல்

காஸ்ட்ரோ, ஹவானா பல்கலைகழகத்தில் சேர்ந்த பிறகு சிறிது சிறிதாக அரசியலால் ஈர்க்கப்பட்டார். கல்லூரி அரசியலில் பங்கு கொண்டார். அப்போது இரண்டு முக்கிய கட்சிகள் மாணவர்கள் மத்தியில் இயங்கி கொண்டிருந்தன. காஸ்ட்ரோ கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்தார். முதல் வருடமே பிரச்சாரத்திலெல்லாம் ஈடுபட்டு வெற்றி பெற்றார். போராட்டங்களும் செய்தார். பேச்சுத் திறமையால் பிடல் மக்களைக் கவர்ந்தார். 1952 ல் அமெரிக்காவின் கைப்பாவையான பாடிஸ்டா, கியூபாவின் ஆட்சியை கைப்பற்றினார். அப்போது "குற்றம் சாட்டுகிறேன்" என்னும் பத்திரிக்கையை துவங்கிய காஸ்ட்ரோ, பாடிஸ்டா அரசின் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தவும், புரட்சிக்கு மக்களை அணிதிரட்டவும் செய்து கொண்டிருந்தார்.

### காஸ்ட்ரோவும் சேகுவேராவும்

மெக்சிகோவில் காஸ்ட்ரோ இருக்கும் போதுதான் அவருக்குத் தேச எல்லைகடந்த மனிதநேயப் போராளியான சேகுவேரா அறிமுகம் ஆனார். அவர் கியூப விடுதலைப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார். காஸ்ட்ரோவும் சேகுவெராவும் க்ரான்மா எனும் கள்ளத்தோணி மூலம் கியூபா வந்தடைந்தனர். அடர்த்தியான மரங்கள் நிறைந்த சியார்ரா மேஸ்தாரவில் தங்கியிருந்தபடியே கியூப விவசாயிகளையும், இளைஞர்களையும் புரட்சிக்கு தயார்ப்படுத்தினார். பின் படிப்படியாக முன்னேறி கியூபாவில் காஸ்ட்ரோ தலைமையிலான சோசியலிச குடியரசை நிறுவினர்.

### காஸ்ட்ரோவும் அமெரிக்காவும்

காஸ்ட்ரோவின் ஆட்சியின்கீழ் கியூபா வந்ததும் அமெரிக்கா அவரைத் தன்வசம் இழக்க முயற்சித்தது. ஆனால் அதற்கு காஸ்ட்ரோ மறுத்து, "கியூப வளங்கள் கியூப மக்களுக்கே சொந்தம்" என்று கூறிவிட்டார். அதனால் அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடையை விதித்தாலும் காஸ்ட்ரோ அதனைச் சமாளித்தார். அமெரிக்கா தனது சி.இ.ஏ அமைப்பின் மூலம் காஸ்ட்ரோவை 638 முறை கொல்லத் திட்டம் தீட்டியும் அதன் முயற்சிகள் பலிக்கவில்லை.

### காஸ்ட்ரோவின் ஆட்சியில் கியூபா

கியூபாவில் அனைவருக்கும் இலவசக் கல்வியை காஸ்ட்ரோ அறிமுகப்படுத்தினார். 1995 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ ஆய்வின்படி கியூபாவில் படிப்பறிவு சதவிகிதம் 96 ஆகும். மேலும் கியூபாவின் தொழில் நுட்பத்துறையில் பணிபுரிபவர்களில் 60 சதவிகிதத்தினர் பெண்கள் ஆவர். மருத்துவ துறையிலும் கியூபர்கள் சிறந்து விளங்கினர். மகப்பேற்றின் போது தாய்மார்களின் இறப்பு விகிதம் உலகிலேயே மிகக்குறைவாக இருந்துவருவது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

உணவு செரிமானமின்மையால் பிடெல் 2008 ஆம் ஆண்டில் பதவிவிலகினார். அவருக்கு பின் அவரின் அண்ணன் ராவுல் காஸ்ட்ரோ அதிபராக பதவியேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசு 2016 (Nobel Prize)

விருதுகள்....



இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவமும் உடலியங்கியல், அமைதி, பொருளியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவோருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் பரிசு.வழங்கியவர் சுவீடன் அக்காதமி, ரோயல் சுவீடிய அறிவியல் கழகம், கரொலீன்ஸ்கா கல்விநிலையம், நோர்வே நோபல் குழ நாடு- சுவீடன் நோர்வே (அமைதிப் பரிசு மட்டும்) நோபெல் பரிசு (Nobel Prize) அல்லது நோபல் பரிசு (பழைய வழக்கு) என்பது ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கும் தொழில்நுட்பங்கள் அல்லது கருவிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் உலகளவில் பெரிதும் மதிக்கப்படும் பரிசு ஆகும். அமைதிக்கான நோபல் பரிசுமட்டும் சில நிறுவனங்களுக்கும் வழங்கப்படுவது உண்டு. மார்ச் 2005 வரை 770 நோபெல் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், சிலர் இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள மறுத்ததும் உண்டு. இது வேதியியலாளர் ஆல்ஃபிரட் நோபெல் என்பவரால் 1895ல் தொடங்கப்பட்டது. முதல் பரிசு 1901 ல் வழங்கப்பட்டது. சில ஆண்டுகள் ஒரு பரிசு கூட அறிவிக்கப்படாமல் போனதும் உண்டு. (உலகமாகா யுத்த காலங்களில்) எனினும், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இந்தப் பரிசு அறிவிக்கப்படும். நோபெல் பரிசு, திரும்பப் பெறத்தக் கதல்ல.

இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம் அல்லது உடலியங்கியல் மற்றும் அமைதி ஆகியவையே ஆல்ஃபிரட் நோபெல் அவர்களின் உயில் படி ஏற்படுத்தப்பட்ட பரிசுகளாகும். பொருளியலுக்கான நோபல் நினைவுப் பரிசு 1968 ல் சுவீடன் நடுவண் வங்கியினால் அதன் 300 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக ஏற்படுத்தப்பட்டது. பரிசு பெறும் ஒவ்வொருவரும், ஒரு தங்கப்பதக்கமும் ஒரு பட்டயமும், நோபெல் அறக்கட்டளையின் அவ்வருட வருமானத்தைப் பொறுத்து பரிசுப் பணமும் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசும் தமிழரும்

நோபல் பரிசினை இதுவரை மூன்று தமிழர் பெற்றுள்ளனர். இந்தப் பெருமைக்குரியோர் ச. வெ. இராமன் (1930), சுப்பிரமணியன் சந்திரசேகர் (1983), வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் (2009) ஆவர்.

## நோபல் பரிசு வழங்கப்படும் துறைகள்

| | |
|---|---|
| Chemistry | இரசாயனம் |
| Economics | பொருளாதாரம் |
| Literature | இலக்கியம் |
| Peace | சமாதானம் |
| Physics | பௌதீகம் |
| Medicine | மருத்துவம் |



## இதுவரை வழங்கப்பட்ட நோபல் பரிசுகளை மிக அதிகமாகப் பெற்றுக்கொண்ட பத்து நாடுகள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. அமெரிக்கா | - 260 | தடவைகள் | 6. ரஷ்ஷியா | - 27 | தடவைகள் |
| 2. பிரித்தானியா | 98 | " | 7. போலந்து | - 26 | " |
| 3. ஜேர்மனி | 80 | " | 8. யப்பான் | - 24 | " |
| 4. பிரான்ஸ் | 54 | " | 9. இத்தாலி | - 19 | " |
| 5. சுவீடன் | 29 | " | 10. கனடா | - 18 | " |

## வயது அடிப்படையில் இதுவரை நோபல் பரிசு வழங்கப்பட்டவர்கள்...

| | |
|---|---|
| 20 வயதிற்குக் கீழ் | 01 ஆள் |
| 21 - 30 வயது | 01 |
| 31 - 40 | 57 பேர் |
| 41 - 50 | 168 |
| 51 - 60 | 238 |
| 61 - 70 | 241 |
| 71 - 80 | 143 |
| 81 - 90 | 36 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2016 விருதுகள் பட்டியல்...

(மொத்தம் 11 பேருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கின்றது)

| | | |
|---|---|---|
| பௌதீகம் | - 3 | பேருக்கு வழங்கப்பட்டுள்ளது |
| இரசாயனம் | - 3 | " " |
| பொருளாதாரம் | - 2 | " " |
| இலக்கியம் | - 1 | ஆளுக்கு " |
| மருத்துவம் | - 1 | " " |
| சமாதானம் | - 1 | " " |

**பெயர், துறை, வயது, நாடு விபரங்கள்.......**

| | | |
|---|---|---|
| Physik | - வயது | - நாடு |
| David J. Thouless | - 82 | - பிரித்தானியா |
| F. Duncan M. Haldane | - 65 | - பிரித்தானியா |
| J. Michael Kosterlitz | - 74 | - பிரித்தானியா |
| Chemie | | |
| Jean-Pierre Sauvage | - 72 | - பிரான்ஸ் |
| J. Fraser Stoddart | - 74 | - பிரித்தானியா |
| Bernard L. Feringa | - 65 | - நெதர்லாந்து |
| Wirtschafts-wissenschaften | | |
| Oliver Hart | - 68 | - அமெரிக்கா |
| Bengt Holmström | - 67 | - பின்லாந்து |
| Literatur | | |
| Bob Dylan | - 75 | - அமெரிக்கா |
| Medizin | | |
| Yoshinori Ōsumi | - 71 | - யப்பான் |
| Frieden | | |
| Juan Manuel Santos | - 65 | - கொலம்பியா |

**ஜேர்மனியர்களுக்கு இதுவரை 80நோபல் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. அவையாவன.**

| | | |
|---|---|---|
| இரசாயனம் | - 24 | தடவைகள் |
| பௌதீகம் | - 24 | " |
| மருத்துவம் | - 18 | " |
| இலக்கியம் | - 08 | " |
| சமாதானம் | - 05 | " |
| பொருளாதாரம் | - 01 | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா) | - 480-00 யூரோ |
| 02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480-00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி | - சுவீஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480-00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன் | - ஜேர்மன் | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480-00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 06. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 07. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480-00 யூரோ |
| 10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240-00 யூரோ |
| 11. செல்வி.சுகிர்தா தவராஜ் | - ஜேர்மனி | |
| ((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 100-00 யூரோ |
| 12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200-00 யூரோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 15-09-2016 + 222-03

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
06. திருமதி பிரிந்தாவனி தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 30-00
08. திருமதி ஜெயா நடேசன் - Havixberg + 20-00
(சகோதரியின் நினைவுநாள் அன்பளிப்பு)
09. திருமதி சுந்தராம்பாள் பாலச்சந்திரன் - Differten + 54-33
10. திரு அம்பலவன் புவனேந்திரன் குடும்பம் - Oberhausen + 300-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

--------
1106-36




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 1106-36

அனுப்பியது: –

| | | |
|---|---|---|
| 1. திருஞானசம்பந்தர் குருகுலம் | | |
| களுதாவளை – மட்டக்களப்பு | – 480-00 | |
| 2. சிறி சண்முகா பெண்கள் இல்லம் | | |
| சிறுவர் இல்லம் – திருகோணமலை | – 480-00 | |
| வங்கிக்கட்டணம் 2x 35-00 | – 70-00 | |
| | ------- | |
| | – 1030-00 | |
| வங்கிவரி:- (01.09.2016 – 30.09.2016) | – 12-48 | |
| (01.10.2016 – 31.10.2016) | – 9-22 | |
| | ---------- | |
| | -1051-70 | – 1051-70 |
| | | ---------- |
| – 15-11-2016ல் மீதி கையிருப்பு | | + 54-66 |
| | | ---------- |


RECEIPT

SRI AHILANDESWARY ARULAHAM
Kovilkulam (Home for the orphans)
Vavuniya. T.P : 024 2221685

No. 13195
Date: 25/09/2016


Received with thanks from Mr. V. Sivarajah
Address Germany
the sum of Rupees Nine Hundred Sixty Euro
Cts.
on account of [illegible]
Name of Bank ........ Branch ........ /Cheque No.
Dated ........

SRI AHILANDESWARY ARULAHAM

960 Euro
CASH
CHEQUE Rs. 150000 L Bank of Ceylon
Manager



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்

# SRI AGILANDESHWARY ARULAHAM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUTH MISSION

74,Jeyapuram North,
E-mail : g.jeyaratnam@ymail.com.
Kilinochchi, Srilanka
T.p : 0778380254./0213202588

08.10.2016

அன்பின் மண் சஞ்சிகை ஆசிரியர் அவர்கட்கு

அன்பின் வாழ்த்துக்கள்.

நீங்கள் 10.09.2016 அன்று அனுப்பிய 790 யூரோ பணம் 20.09.2016 அன்று கிடைத்தது.மிகவும் நன்றி. சந்தோசம். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குரிய தேவைகளுக்காக அனுப்பி வரும் பணத்திற்கு மிகவும் நன்றி. பிள்ளைகளும் இப்பணத்தினால் பயன் பெறுகின்றார்கள். தொடர்ந்தும் இவ்வாறான உதவிகள் செய்விர்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மீண்டும் உங்கள் உதவிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பற்றுச்சீட்டின் பிரதியை மின்னஞ்சலில் அனுப்புகின்றேன்.


நன்றி

இறையாசிகள்

இங்ஙனம்
Sis Gladys



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Ruth Mission

No: 077 No.74, Jeyapuram North, Kilinochchi

Received with Thanks the Sum of Rupees One hundred twenty three thousand, three thousand and forty seven Rs

From Mr. V. Sivarajah

On Account of Donation

Rs:123,347/=

Director/Manager



ரூத் மிஷன் - ஜெயபுரம் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி.



ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல், 2016, நவம்பர் 8,2016, செவ்வாயன்று நடத்தப்பட்டது. இது 58வது தேர்தலாகும். நான்காண்டுகளுக்கு ஒருமுறையான அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தல் ஆகும். வாக்காளர்கள் குடியரசுத் தலைவர் தேர்வாளர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் (45வது) புதிய குடியரசுத் தலைவரையும் (48வது) துணை குடியரசுத் தலைவரையும் வாக்காளர் குழ மூலமாகத் தேர்ந்தெடுத்தனர். பிரதான ஆறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர். மொத்தமான தொகுதிகள் 538 ஆகும் இதில் 270 தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும். இந்த தேர்தலில் 14 கோடி 63 இலட்சத்து 11 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்காக தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர். இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டனுக்கும்(68), குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்புக்கும்(70) இடையே கடுமையான போட்டி நிலவியது

### அமெரிக்காவின் அதிபரானார் டொனால்ட் ட்ரம்ப்!

அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் அதிபராக வெற்றி பெற்றுள்ளார்.அதிக பரபரப்புகளுக்கு இடையே இந்த தேர்தல் நடந்து முடிந்துள்ளது. டொனால்ட் ட்ரம்ப் 276 எலக்டொரல் ஓட்டுகள் பெற, ஹிலரி 218 ஓட்டுகள் மட்டுமே பெற்றார். டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.எதிர்வரும் 20.1.2017 அன்று புதிய ஜனாதியாகப் பதவி ஏற்பார்.

### அதிக வாக்குகளை பெற்றும் ஹிலாரி தோல்வியடைந்தார் ஏன்? அமெரிக்க தேர்தல்

அமெரிக்காவில் இடம்பெற்ற 45 ஆவது ஜனாதிபதி தேர்தலில் அதிக வாக்குகளை பெற்ற ஹிலாரி கிளின்டன் தேர்தலில் தோல்வியடைந்துள்ளமை அந்நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் 5 கோடியே 99 இலட்சத்து 26 ஆயிரத்து 386 வாக்குகளை பெற்று 47.7 வீதத்தில் 232 தேர்தல் வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, ஹிலாரி கிளின்டனை எதிர்த்து குடியரசுக் கட்சியின் சார்பாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட டொனால்ட் டிரம்ப் 5 கோடியே 96 இலட்சத்து 98 ஆயிரத்து 506 வாக்குகளை பெற்று 47.5 வீதத்தில் 290 தேர்தல் வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளார்.குறித்த தேர்தலில் ஹிலாரி கிளின்டன், டொனால்ட் டிரம்பினை விட 2 இலட்சத்து 27 ஆயிரத்து 880 வாக்குகள் அதிகம் பெற்றிருந்தாலும் தேர்தல் வாக்குகளில் டிரம்பினை விட குறைவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யார் இந்த டொனால்ட் டிரம்ப்!


அமெரிக்காவின் ரியல் எஸ்டேட் துறையில் ஜாம்பவனாக திகழ்ந்தவர் இன்று அமெரிக்காவின் அதிபராகி உள்ளார். இவரின் முழுப்பெயர் டொனால்ட் ஜான் டிரம்ப், 1946-ம் ஆண்டு ஜூன் 14-ம் திகதி பிறந்த டிரம்ப்-க்கு இப்போது 70 வயதாகிறது. இவர் அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர், எழுத்தாளர் மற்றும் தொலைக்காட்சிப் பிரபலம். இவருடைய நிகர சொத்து மதிப்பு 4.5 பில்லியன் டொலராகும். ரியல் எஸ்டேட் துறையில் கொடிகட்டி பறந்த டிரம்ப், தொலைக்காட்சிகளிலும் பிரபலமானவராக திகழ்ந்தார். 1987ம் ஆண்டில் குடியரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார் என்றாலும் 1999ம் ஆண்டு அதில் இருந்து வெளியேறினார். பின்னர், 2009ம் ஆண்டில் மீண்டும் குடியரசுக் கட்சியில் இணைந்து 2011ம் ஆண்டு வரை அதில் நீடித்தார். 1987ம் ஆண்டிற்கு முன்னர் ஜனநாயகக்கட்சியிலும், 1999 முதல் 2001 வரை சீர்திருத்தக் கட்சியிலும் இணைந்து ட்ரம்ப் பணியாற்றியுள்ளார். இதற்கிடையே 2012ம் ஆண்டு மீண்டு குடியரசுக் கட்சியில் இணைந்தார், தொடர்ந்து 2016ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டனுக்கு எதிராக போட்டியிட்டவர், தற்போது அமெரிக்காவின் 45வது ஜனாதிபதியாகி உள்ளார்.எந்தவித அரசியல் பதவிகளும் வகிக்காத டொனால்ட் டிரம்ப், குறுகிய காலத்தில் குடியரசு கட்சியின் வேட்பாளராகி தேர்தலில் மக்களின் மனதை கவர்ந்து வெற்றி வாகை சூடியுள்ளார்

### புதிய அதிபர் எப்போதிலிருந்து பணியாற்றத் தொடங்குவார்?

முடிவு தெளிவானதாக இருந்தால், வெற்றி பெற்ற வேட்பாளர், அமைச்சரவையை உருவாக்குவார் மற்றும் ஒரு முழுமையான கொள்கை திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்குவார்.இதற்கிடையில் பதவிக்காலம் முடிந்த "செயல்படாத அதிபர்" தான் தனது பதவிக்காலம் மூலம் விட்டுச்செல்லும் சாதனைகளை வடிவமைப்பதிலும், பொதுவாக வெள்ளை மாளிகையிலிருந்து தனது உடைமைகளை எடுத்துச் செல்வதிலும், காலத்தை செலவழிப்பார். அமெரிக்க அரசியல் அமைப்பின்படி தேர்தலை அடுத்து வரும் ஆண்டின் ஜனவரி மாதம் 20ம் தேதி, வெற்றி பெற்றவர் அதிபராக பதவியேற்க தற்போதய ஜனாதிபதி பராக் ஒபாமா விடைபெற்றுக்கொள்வார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Neue Heimat Chatroom: In Senthuran Varatharajah Roman "Vor der Zunahme der Zeichen" erzählen sich zwei Facebook-User mit Migrationshintergrund, wie sie in Deutschland angekommen sind - und was es heißt, von den Rändern aus zu sprechen.

In der Kita ist helle "Hautfarbe" angesagt

Das Buch ist ein Dialog zwischen den Facebook-Usern Senthil Vasuthevan und Valmira Surroi innerhalb des Facebook-Messengers. Beide sind Studenten, Geisteswissenschaftler. Senthil stammt (wie der Autor) aus Sri Lanka, Valmira aus dem Kosovo. Beide sind mit ihren Familien als Kinder vor dem Bürgerkrieg in der Heimat nach Deutschland geflohen. Dieses prägende Erlebnis verbindet die Protagonisten. Sie haben das Gefühl, einander Dinge erzählen zu können, die sie sonst niemandem anvertrauen – zum Beispiel von der alltäglichen Diskriminierung, die sie wegen ihrer ausländischen Namen erleben. Oder von Erzieherinnen im Kindergarten, die Senthil korrigierten, wenn er Menschen mit dunkler Haut malte. Er solle doch lieber den Stift in Hellrosa zum Malen nehmen - das nenne man hier "Hautfarbe".

Über den einzelnen Nachrichten von Senthil und Valmira steht wie im echten Chat der Name des Users, die Uhrzeit ist zu sehen, zu der die Nachricht verschickt wurde. Senthil schreibt - wie viele User beim Chatten - alle Wörter klein.

Die Sprache der beiden Protagonisten hat allerdings wenig mit der realen Sprache im Facebook-Messenger zu tun: "als mein cousin, ihr neffe, siebzehn jahre jünger als sie, die möblierte studentenwohnung schlüsseldrehend betrat, die er gemeinsam mit seiner schwester wenige wochen zuvor erst bezogen hatte, versteckte sie sich in einem winkel der küche, in der sie das abendessen zuzubereiten begann." Sechs Kommas in einem Satz! Da spürt man, dass der Autor gerade in Philosophie promoviert beim Vorstandsvorsitzenden der internationalen Hegel-Gesellschaft.

Beziehung von Sprache und Migration philosphisch betrachten

Andererseits geht es Varatharajah auch gar nicht so sehr um die realistische Darstellung eines Facebook-Chats, sondern vielmehr um eine philosophische Betrachtung des Zusammenhangs zwischen Sprache und Migration. "niemand wird wissen, von welchen rändern wir aus sprechen, und dass wir darüber sprechen können, ändert nichts daran", schreibt Senthil einmal.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தூரன் வரதராசா பிறப்பு:-1984 - இடம்:- ஜேர்மனி

ஈழத்தமிழரான செந்தூரன் வரதராசா என்பவர் ஓர் இளைய எழுத்தாளராவர். இவர் தற்போது பேர்ளின் நகரில் வசித்துக்கொண்டிருக்கிறார். இவர் ஜேர்மனி மொழியில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நாலைப் பெறவிரும்புவோர் ஜேர்மனியிலுள்ள புத்தகக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். இவர் எழுதிய புத்தகத்தின் பெயர் “”Zunahme der Zeichen”” இதன் விலை 19-99 யூரோவாகும். இவரைப்பற்றிய விபரங்கள் இந்த நாட்டுப் பத்திரிகைகள் தொலைக்காட்சிகளில் வெளிவந்துள்ளன. பல பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டுள்ளார். Google சமூகவலைத்தளத்தில் சென்று நீங்கள் பார்வையிட்டு மேலும் இவரைப்பற்றியும் இந்நால்பற்றியும் ஜேர்மனிய ஊடகங்களில் வெளிவந்த செய்திகள், பேட்டிகள் பெற்ற விருதுகள் போன்ற பல விடையங்களையும் அறிந்து கொள்ளலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
திருநெல்வேலி - யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 180



MERRY CHRISTMAS
AND A HAPPY NEW YEAR

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org